KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஹு மார்ச் மீ 28 உ [No. 13

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 193
2. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 195
3. ஒத்தெல்லோ (அங்கம் 2. களம் 1.)
Shakespeare's "Othello" 199
4. கம்பர் சிருட்டியிற் பிறந்த கற்பினள்
K. நாராயணரெட்டிகாரு 201
5. சூரியன் (ஆராய்ச்சிக் கருவிகள்)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T., 202
6. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 5-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 204
7. உருபு மயக்கம் (சிறுகதை)
K. S. முத்துராமலிங்கம் M. A. 206
8. வர்த்தமானம் 208

க லா நி ல ய ம்

வழியும் வகையும் 2.

போரின்திறத்தைப் புகழ்கின்றார் ஏனையோர் என்பது என்! கொல்லாமை கோடிபெறும் என்னுங் கொள்கைக்கு இறையாகி நின்று,

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி

[நல்ல நெறியென்று சொல்லப்படுவது யாதெனின், யாதொன்றையுங் கொல்லாமையைக் கடைப்பிடிக்கின்ற நெறியேயாம்] என்றும்

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை

[தன் உயிரை இழக்கவேண்டி நேர்ந்தாலும், வேறு ஒன்றின் இனியஉயிரைக் கொல்லும் காரியம் ஒன்றும் செய்ய வேண்டா] என்றும்

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து

[கொலையைத் தொழிலாக உடைய மாந்தர், அத்தொழிலின் கீழ்மையை அறிந்தவர்களால் புலைத்தொழிலனராக மதிக்கப்படுவார்]

என்றும், எண்ணரிய நீர்மையுடன் நிகழ்த்தியுள அப்பெருந்தகையாம் திருவள்ளுவ நாயனாரே, படைச்செருக்குப் பகரப் புகுங்கால், "பேராண்மை யென்ப தறுகண்" (பகைவர்மேல் இரக்கங்கொள்ளாமற் செய்யும் வீரப்போரே பேராண்மையாம்) என்றுகொலைவினைக்குரிய கண்ணோட்டமின்மையைக் கட்டாண்மையாக்கியதன்றியும்,

என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்

[பகைவர்களே, என் தலைவன்முன் நிற்காமல் போமின், இதன்முன் என் தலைவன்முன் போரேற்று நின்று உயிரிழந்து நடுகல்லின்கீழ் நிற்பவர் பலர்]

எனக் கொலைத்தொழில் செருக்கைக் கொண்டாடியும், கொலைசெய்யச் சென்றோர் தாமே கொலையுண்பதை,

இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்

[பகைவரைக் கொல்வேன் என்று வஞ்சினங் கூறிச் சென்று அதனை நிறைவேற்ற முயல்கையில் தாமே செத்துவிட்டாலும், வஞ்சினம் தப்பிவிட்டதென்று அவ்வீரரை ஒருவரும் பழித்துப் பேச மாட்டார்] என்றும்

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து

[தம்மை ஆதரித்த அரசர் கண்கள் நீர் சொரியும்படி போரிடைச் சாகப்பெற்றால், அத்தகைய சாவு ஒருவனால் யாசித்தாயினும் பெற்றுக்கொள்ளுந்தகுதியுடையதாம்]

என்றும் பாராட்டிப் பொய்யாமொழியெனச் சில புகல்வாரென்றால், நம்மனோர் விந்தை இவ்வகையில் பின்னும் பலபடி அதிகமாவது இயற்கையே.

ஆம்; இவ்விந்தையினின்று விளைகின்ற சிந்தனைகளைச் சோதிப்பது பயன்தரும். அவ்வெண்ணங்கள் மேற்புறவாழ்க்கையில் மிதப்பதைவிட்டு நம்மைஆன்மாவினது ஆழத்தில் அமர்த்தலாம். இரத்தப்பெருக்

கையே தன்கைத் தொழிலாகக் கொண்டிருப்பினும், உயிரை விஷயமாகவுடைய வாழ்க்கையின் மூலமந்திரத்தைப் போர்ச்சேவகன் தன் அகத்தினில் வைத்துள்ள மேன்மை, சற்றே ஊன்றிநோக்கினால் விளங்க வருவது அருமையன்று. உடல் அழியாமல் இருப்பதற்கு உயிர் எத்துணை அவசியமோ, அத்துணை அவசியமாக, அவ்வுயிர் அழியாமலிருப்பதற்கு, அவ்வுயிரிற்கும் வேறொன்று வேண்டியிருக்கின்றது. உயிரிற்கும் ஓர் உயிர்நிலை வேண்டும். உயிரின் உயிர்நிலை எங்குளதென்று வினவினால், அதற்கு விடையாக வரத்தக்க வாசகம் இது-உயிர்நிலை மரணத்திலேயே இருக்கின்றது. இவ்வாசகத்தின் முரணிற்குள் நாம் முற்றிலும் முழுகிவிட வேண்டா. "பிழைக்கும் பிள்ளையானால்பிறந்தவுடனே இறந்துதானிருக்காதோ" என்பது போன்றவோர் உலகவழக்கு நவில்கின்ற விளையாட்டு அன்று அது. ஒருவனது உயிர்நிலை அவன் மரணத்திலே இருக்கின்ற நுட்பத்தைச் செப்பலரிது. எனினும் மரணத்தினிடத்தில் வைத்திருக்கின்ற மதிப்பைக் கொண்டே ஒருவன் வாழ்க்கையில் நிலைத்திருக்கின்ற நிச்சயத்தை நினைக்க இயலும்.

போர்முறை வகுத்திருக்கின்ற நம் புறப்பொருள் துறைகளையும், திருவள்ளுவர் வகுத்துரைத்த படைச்செருக்கையும், இவையனைய பிற நூல்களையும், நுண்ணிதின் நாம் ஆராய்வோமாயின், உள்ளுறைப்பொருளொன்று உணரப் பெறுவோம். புறப்பொருள் புகல்கின்ற போர் அனைத்தும், உலகவிவகாரப்படி, முற்றிலும் பயனற்றதோர் போராம். மண்ணாசையாலும் பொருளாசையாலும் வர்த்தகப் போட்டியினாலும், மற்று, ஓர் வஞ்சினத்தை முடிப்பதற்கென்றேனும் துவக்கிச் செய்யப்படுகின்ற போர்கள் அல்ல அவை. உண்பதும் உயிர்ப்பதும் உறங்குவதும் போல உயிர் வாழ்க்கைக்கே இன்றியமையாத தொன்றாய்ப் புறப்பொருள் வெண்பாமாலைப் போர்கள் நிகழ்கின்றன. இருந்தால்போல் இருந்து ஓர்நாள் ஒரு அரசன் தன் படையைத் திரட்டிச் சென்று, வேறோர் ஊரிலுள்ள பசுக்களை யோட்டிவரவேனும் அல்லது அவ்வூரைக் கொள்ளையடிக்கவேனும் துவக்கக் காண்கிறோம். இதனிலிருந்து இருதிறத்தோர்க்கும் கடும்போர் உண்டாகின்றது. வீண்சண்டை என்றா லிதனில் வேறில்லை. வெற்றிக்காகவே இவர் பொருவதாகவுந் தோன்றக் காணோம்; போரிற்காகவே பொருவாராகத் தோன்றுகின்றனர். வெல்லும்பொருளிற் கிவர்விழைவதாகவுந் தெரியவில்லை.

அங்கட் கிணையன் றுடியன் விறலிபாண்
வெங்கட்கு வீசும் விலையாகும்—செங்கட்
செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி
வரிச்சிலையாற் றந்த வளம்

[சிவந்த கண்களை யுடையாராகிப் போரிற்குப் பின்னிடாத மன்னர் போர்முனையிற் கோபித்துக் கட்டமைந்த தம் வில்லினால் கவர்ந்துகொண்ட செல்வமானது, அழகிய கண்களையுடைய கிணை என்னும் பறையை அடிப்பவனும் துடிகொட்டுபவனும் பாணிச்சியும் பாணனும் தாம் வாங்கிக் குடிக்கின்ற வெவ்விய கள்ளிற்குக் கொடுக்கும் விலை ஆகும்.]

என்னு மாற்றால், கவர்ந்த பொருளெல்லாம், கிணையன் துடியன் விறலி பாண் அனையவர் உண்டாடிக் களிக்கும்படி பகிர்ந்து கொடுத்துவிடப்படும் பரிசு தெரிகின்றது. மற்று, எல்லாப் புலவர்களும், போர்க்களத்தில் பெறுகின்ற வெற்றியைக்காட்டிலும் உறுகின்ற மரணத்தையே உயர்த்திப்பேசுகின்றனர். வீரர்கள் அடைகின்ற மரணம் எல்லோராலும் யாசித்தேனுங் கொள்ளத்தக்கதாம் என்று விளம்பிய திருவள்ளுவர் கருத்தில் இருந்தது என்னவென்பதில் ஐயம் இல்லை. பின்னும் அவர்

விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து

[ஒருவீரன், தன்ஆயுளில் நடந்த நாள்களை யெல்லாம் எடுத்து எண்ணுங்கால், தன் முகத்திலும் மார்பிலும் புண்படாத நாட்களையெல்லாம் வீணாகக் கழிந்துபோன நாள்களின் கணக்கிலேயே வைப்பான்.]

என்றும்,

சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து

[உலகத்தில் சூழ்ந்து நிற்கும் புகழை வேண்டி, உயிர் வாழ்வதை வேண்டாத வீரர்களே, தம்கால்களில் வீரக்கழலைக் கட்டிக்கொள்வது அழகுடையதாம்.]

என்றும், பகர்ந்துள குறள்கள் நாம் முன்னே சொன்னவற்றை வற்புறுத்துகின்றன. அன்னவாறே,

அலகில் வெற்றியு முரிமையு மிவையென
அவய வத்தினி லெழுதிய வறிகுறி
அவையெ னப்பல வடுநிரை யுடையவ
ரடிபி றக்கிடி லமரர்த முலகொடிவ்
வுலகு கைப்படு மெனினும தொழிபவ
ருடலெ மக்கொரு சுமையென முனிபவர்
உயிரை விற்றுறு புகழ்கொள வுழல்பவர்
ஒருவ ரொப்பவர் படைஞர்கண் மிடையவே

[தாம் பெற்றுள்ள அளவற்ற வெற்றியும் தம்முடைய உரிமையும் இவைகளேயெனத் தம் அவயவங்களில் எழுதிவைத்திருக்கின்ற அறிகுறிபோன்ற புண்பட்ட வடுக்களின் வரிசையை யுடையவர்களும்; போரில் பின்னே அடிவைத்து ஒதுங்கினால், தேவலோகத்தோடு இவ்வுலகின் ஆட்சியும் வாய்க்கு மெனினும் அது செய்யாதவர்களும்; உடல் தமக்கு ஒரு சுமையென்று கருதி வெறுப்பவர்களும், தம் உயிரைவிற்றுச் சிறந்த புகழைப்பெற்றுக் கொள்ள ஆவலுட னிருப்பவர்களும் ஆகி ஒருவருக்கொருவர் எற்றந்தாழ்வில்லாத படைஞர்கள் நெருங்கவே]

என்னும் கலிங்கத்துப்பரணிச் செய்யுளிலும் இந்தச் செய்தியையே காண்கின்றோம். புண்பட்ட வடுநிரை உரிமைக்கும் உயிர் துறக்கும் உயர்விற்குமே வீரர்களாகப் போர்க்களம் நயந்து செல்கின்றனர். அன்றியும், வெற்றியை வகைசெய்து கூறுகின்ற வாகைப் படலத்தி னிறுதியில்,

சிறந்த திதுவெனச் செஞ்சோறு வாய்ப்ப
மறந்தரு வாளம ரென்னும்—பிறங்கழலுள்
ஆருயி ரென்னு மவிவேட்டா ராங்கஃதால்
வீரியரெய் தற்பால வீடு

[சினங்கொண்ட வாட்போர் என்னும் பெருத்த நெருப்பினுள்ளே, செஞ்சோற்றுக் கடன் தப்பாதபடி தாம்செய்

யத்தருவது இதுவேயென்று, தம்பெறுவதற்கரியஉயிரை யாகஞ்செய்து அவியாக வீரர் கொடுத்துவிட்டார். அங்கு வீரர் அடைவதற்குரிய சுவர்க்கம் அத்தகையது]

என்றுகூறுகின்ற ஐயனாரிதனாரும், வீரர் தம்ஆவியைத் தருதலே புகுகின்ற போரிற்குரிய கருமமாக அமைத்துக் காட்டியிருக்கிறார். இன்னபடி உயிரைக் கொடுப்பதற்கே உவக்கின்ற மனத்தினராய் வாழ்வது இவ்வீரர் திறம். பிறருயிரை வௌவச் செல்வதெல்லாம் தம்முயிரைவிடுவதற்கு ஒருவழியாகவே நிற்கின்றது. இன்னுஞ் சிறிது இந்நூல்களில் ஆழ்ந்து செல்வோமெனின், வாழ்க்கையென்னும் பெருவேள்வியில் தம் ஆவியை அவியாக அளிப்பதற்குப் போர்க்களம்என்னும் கனலும் வேண்டாத வீரர் சிலர் இருக்கவல்லவராவதைக் காண்கின்றோம். கலிங்கத்துப்பரணியில் காளியின்கோயிலை வருணிக்கின்ற நம் ஜயங்கொண்டார், அந்தக் கோயிலின் முன்னுள்ள பலிபீடங்களிழ்ச்சிகளைச் சித்திரஞ்செய்யும் தாழிசைகள் வீரச்சுவையின் எல்லையை வியப்புற விளம்புகின்றன. அங்கு,

சலியாத தனியாண்மைத் தறுகண் வீரர்
தருகவரம் வரத்தினுக்குத் தக்க தாகப்
பலியாக வுறுப்பரிந்து தருது மென்று
பரவுமொலி கடலொலியிற் பரக்கு மாதோ

[சலிக்காதஒப்பற்றஆண்மையும் அஞ்சாமையும்உடைய வீரர், தேவியை,'எமக்கு வரம்தருக, நீதரும் வரத்திற்குத் தகுந்தபடி, எங்கள் அவயவங்களை வெட்டிப் பலியாகக் கொடுப்போம்' என்று பிரார்த்தனை செய்கின்ற இரைச்சல் கடல்ஒலிபோல் பரவும்]

சொல்லரிய வோமத்தீ வளர்ப்ப ராலோ
தொழுதிருந்து பழுவெலும்பு தொடர வாங்கி
வல்லெரியின் விறகாக விடுவ ராலோ
வழிகுருதி நெய்யாக வார்ப்ப ராலோ

[சொல்வதற்கரிய ஓமத் தீவளர்ப்பர். அதனைத்தொழுது, தம் விலா எலும்புகளைக் கோத்துவாங்கி அந்நெருப்பிற்கு விறகாக இடுவார். வழிகின்ற தம் இரத்தத்தை நெய்யாக வார்ப்பர்.]

அடிக்கழுத்தி னெடுஞ்சிரத்தை யரிவ ராலோ
அரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலுங் கும்பிட்டு நிற்கு மாலோ

[அடிக்கழுத்தினோடு தம் தலையைத் தாமே வெட்டிக் கொள்வார். அப்படி வெட்டின தலையைத் தேவியின் கையில் கொடுப்பார். அப்படிக் கொடுத்த தலையானது தேவியைத் தோத்திரம்செய்யும்; தலையிழந்த உடலும்அப்பொழுது கும்பிட்டு நிற்கும்.]

மோடி முன்றலையை வைப்ப ரேமுடி
குலைந்த குஞ்சியை முடிப்பரே
ஆடி நின்றுகுரு திப்பு துத்திலத
மம்மு கத்தினி லமைப்பரே

[சிலர், தேவிக்குமுன் தாம் அரிந்த தலையைவைப்பார், வைத்தபின் தலையிழந்தும் உடலின் கைகொண்டு, அவிழ்ந்து குலைந்த மயிரை முடிப்பர், களிப்பினால் ஆடுவர்; தம் கழுத்திலிருந்து வழிகின்ற இரத்தத்தைத் தோய்த்துப் புதிய திலகமாக அம்முகத்தில் இடுவார்.]

கடன மைந்தது கருந்தலை யரிந்த பொழுது
கடவ தொன்றுமிலை யென்று விளையாடு முடலே
உடல்வி ழுந்திடி னுகர்ந்திட வுவந்த சிலபேய்
உறுபெரும்பசி யுடன்றிட வுடன்றி ரியுமே

[தன்பெரும் தலையை அறுத்துக் கொடுத்தவுடன் தான் செலுத்தவேண்டியகடன் தீர்ந்துவிட்டதாகையால்இனிச் செய்யவேண்டியது ஒன்றுமில்லைஎன்று உடலானது விளையாடும். அவ்வுடல் விளையாடி விழுந்தவுடனே அதனை உண்ணவேண்டும் என்னும் ஆசையுடையனவாய்ச் சில பேய்கள், மிக்க பெரிய பசி தம்மைவருத்த அவ்வுடல்களினுடன் திரிந்துகொண்டிருக்கும்.]

புறப்பொருட் துறையிலும் வீரச்சுவை அவிநயத்திலும் அளப்பரிய மேன்மைவாய்ந்த இத்தகைய செய்திகளை ஓதும்போதும் உன்னும்போதும் துண்ணெனும் நம் நெஞ்சம். அங்ஙனம் துணுக்கமுறுங் காலையும் நமது உள்ளத்தின்கண் உரைப்பதற்கரிய ஒருவகை உவகையுந் துள்ளாமல் தீராது. இவ்வுவகைக்குரிய காரணம் யாது?

கம்பராமாயணம்

கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[165-வது பக்கத் தொடர்ச்சி]

புலவரே சற்றே போறும்.

தன்கணவனுக்கோர்கூற்றுவனைக்கொணர்ந்த தம்பி யோடு மினிதிருந்து களியாட்டாயர்தலின்றியே தமிழில்வந்த தாரை வாலியின் கற்பினளேயாகி, கொடிது வந்தடைந்த கைம்மையுந் தானும் தமியளுமாய் வைகிய கோயிலின்கண், அநுமனோடு அங்கதனும்

எய்தி மேற்செயத் தக்கதென் னென்றலுஞ்
செய்திற் செய்தற் கருநெடுந் தீயன
நொய்தி லன்னவை நீக்கவு நோக்குதிர்
உய்திர் போலு முதவிகொன் றீரென

[அடைந்து, இலக்குவன் வந்துள செய்தியை விளம்பி, இனி நாம் செய்யத்தகுந்த காரியம் யாது என்று அவளை வினவியஅளவில், அவள், செய்தற்கரிய பெரிய தீமைகளை எளிதிற் செய்கின்றீர், அவைகளால் விளையும் கேடுகளை விலக்குவதற்கு இப்பொழுது வழி பார்க்கின்றீர். செய்த உதவியைக் கொன்றீர். இனி உய்வீர் போலும்" என்று] இடித்துரைக்கலுற்றாள். செய்தற்கரிய நெடுந் தீயன செய்ததெல்லாம் சுக்கிரீவனே யாக, அநுமனையும் அங்கதனையும் முன்னிலைப்படுத்தி இன்னது இவள் இயம்பியது அவள்தன் உள்ளத்தின் அகலத்தைக் காட்டும். உரைத்துப் பின்,

மீட்டு மொன்று விளம்புகின் றாள்படை
கூட்டு மென்றுமைக் கொற்றவன் கூறிய
நாட்டி றம்பினுந் நாட்டிறம் பும்மெனக்
கேட்டி லீரினிக் காண்டிர்கி டைத்திரால்

[மற்றும் ஒன்று சொல்லுகின்றாள். படைகளைச் சேர்த்துக்கொண்டு வாருங்கள் என்று உங்களைநோக்கி வெற்றியுடைய இராமபிரான் கூறிய நாள் தவறுமானால் உங்கள்

வாழ்நாளும்தவறிவிடும்என்று நான் சொல்லிவந்ததொன்றையும் கேட்கவில்லை. அகப்பட்டுக்கொண்டீர். அதன் பயனை இனி அனுபவித்துப் பாருங்கள்.]

வாலி யாருயிர் காலனும் வாங்கவிற்
கோலி வாலிய செல்வங் கொடுத்தவர்
போலு மாலும் புறத்திருப் பாரிது
சாலு மாலுங் கடமையி னோர்க்கெலாம்

[வாலியாரினுடைய உயிரை யமனும் கவர்ந்துகொள்ளும்படி வில்லை வளைத்து அவ்வாலியின் செல்வத்தைக் கொடுத்தவரோ உங்களால் புறக்கணிக்கப்படுபவர். உங்களைப்போன்று கடமையில் கருத்துடையவர்களுக்கு இது போதும்]

தேவி நீங்கவத் தேவரிற் சீரியன்
ஆவி நீங்கினன் போலயர் வானது
பாவி யாது பருகுதிர் போலுநுங்
காவி நாண்மலர்க் கண்ணியர் காதனீர்

[மனைவி பிரிந்திருக்க, தேவர்களைவிடச் சிறந்தவனான அந்தஇராமன்,உயிர்நீங்கியவன்போல்தளர்கின்றான்.அதனைக்கருதாமல்நீங்கள்,அன்றுஅலர்ந்தகாவிமலர்போன்ற மாதர்களின் காதலை அனுபவிக்கின்றீர்]

திறம்பி னீர்மெய் சிதைத்தி ருதவியை
நிறம்பொ லீருங்க டிவினை நேர்ந்ததால்
மறஞ்செய் வானுறின் மாளுதிர் மற்றினிப்
புறஞ்செய் தாவதெ னென்கின்ற போதின்வாய்

[வாய்மை தவறினீர், உங்களுக்குச் செய்த உதவியைக் கெடுத்தீர், இப்படிப்பொல்லாததன்மையுடையவரானீர். நீங்கள் செய்ததீவினைகளின் பயன் வந்து நேர்கின்றது. அவர்களோடு போர்செய்ய முயல்வீர்களாயின் மாள்வீர். இதன்மேல் வேறு என்ன செய்யக்கூடும்-என்கின்றபொழுது]

கோளு றுத்தற் கரிய குரக்கின
நீளெ ழுத்தொட ருந்நெடு வாயிலைத்
தாளு றுத்தித் தடவரை தந்தன
மூளு றுத்தி யடுக்கின மொய்ம்பினால்

[தடுக்கமாட்டாத வலிமையுடைய குரங்குக் கூட்டங்கள், நீண்ட தூண்களின் வரிசையமைந்த நகரவாயிலைத் தாளிட்டு, தம் வலிமையினால் பெரிய மலைகளைக்கொண்டு வந்து இணைத்து அடுக்கின]

தகவுடைய பெருமாட்டி இவள் இவள்என்றுஇத் தாரைகழறிய ஒவ்வொருசொல்லு மழகிற்றழைத்த நிழலைப்பரப்பி நவிலலாகின்றது. வாலியை வஞ்சனையாற் கொல்வித்தான் அச்சுக்கிரீவன் என்று அவன்பால் யாதும் வன்மம் வைத்தாளலள். அப்பழியினை இன்று தீர்த்துக்கொள்ளும்வேளையொன்று தானே வந்து தன்கை புகுந்ததெனக் களித்தாளல்லள். தன்னுயிரினுமினிய நாயகனை இழப்பித்தவகையில் தனக்குத் தாங்கருந் தீங்கு செய்தானென் றச்சுக்கிரீவனை வெகுண்டொருசொல் விளம்பாத இவ் வுயர்குணத்துத்தமி, இன்று, இராமபிரான் செய்த வுதவியைக் கொன்றிச் சுக்கிரீவன்தீது இயற்றினானெனவே சினமுறச் சில சொல்லுகின்றாள். இன்னணம், தனக்குப் பிறர் தீது செய்யுங்கால், அவரை நோகாமல் தன் விதியே எனத் தணிந்திருந்து, பிறர் பிறர்க்கு இன்னா செய்யுங்கால் வெகுள்கின்ற இச் செம்மைசேர் சீற்றம் உடைமையின் இந் நல்லாள் அன்று அங்கர்ப்புறம் போந்துள இளையகாளை இலக்குவனையே ஒக்கின்றாள் §. செய்வதற்கரிய உதவி செய்த இராமனது துன்பத்தை நீக்க விரையாமல், கள்ளினும் காவிநாண்மலர்க் கண்ணியர் நல்குமொரு காதலிலும் உழன்று கிடந்தசுக்கிரீவனது தகவின்மையைக்கருதி வெகுள்கின்றவாங்கே, அதனால் அவன் கேடடைய நிற்றலை நினைத்துமிக இரங்குமொரு தாரையின் இந்நீர்மை தனித்ததோர் சிறப்புவாய்ந்து விளங்குகின்றது. அது தானுமன்றி, குற்றமிழைத்த தத்தனையும் சுக்கிரீவன் ஒருவனே யானாலும், அங்கதனையும் அனுமனையும் உடன்சேர்த்து முன்னிலைப்படுத்தும் இது, செய்யப்பட்டகுற்றத்தைச் சினந்துபேசுகின்றாளல்லது செய்தவனை ஏசுகின்றாள் அல்லள் என்பதை நுண்ணிதின் தெரிவிக்கும்.தன்னையும் சேர்த்துக்கொண்டு,"இந்தப் பிழை இழைத்தோம், எங்ஙனம் இனி உய்வோம்" என்று பேசியிருப்பாளாயின், அந்தத் தாரையின் தகைமை பின்னும் பலபடி உயர்ந்திருக்குமென்பது உண்மையேனுந் தன்முன்னவன் பூண்டபழியில் தானும் பங்குகொண்டு, "பிறர்மனை நோக்குவேமை யுறவெனப் பெறுதிபோலாம்" என்று விளம்பவல்ல அரக்கர்குல அண்ணல் அக்கும்பகர்ணனின் உயரத்தை இக் குரக்கினத் தலைவி எட்ட மாட்டாமை அவளுக்குக் குறைவுமன்று. மேலும், இவளுடைய நிலைக்கு அது இயற்கை யாகுமோ வென்னும் ஐயத்திற்கும் இடமுளது. தன் தமையன் அயல்மனை நயந்த பாவத்திற் பங்குகொள்ளுமக் கும்பகருணனுக்கருகு, தன் காதல்நாயகனை நமனுக் கிரையாக்கிய தம்பியின் பழியொடு கலந்துகொள்ளாத தாரையை வைத்து ஒப்பு நோக்கிக் குறைகாணலோ முறைமை யன்றெனினும் அமையும். மற்று,அத்தம்பியை அடுதற்குரிய வொருவன் வந்தடைந்துளன் என்பது அறிந்தும், அவன் பக்கல்தான் சென்றுசேர்ந்து சினத்தினை மேன்மேல் மூட்டாததன்றியும், வந்துளோன் தன் வெஞ்சினத்தை முடித்துக் கொள்ளட்டுமே என்று விலகிநிற்காமல், இத்தாரை, இலக்குவனது முனிவினைத் தணிவு செய்து சுக்கிரீவனைக் காக்க முற்பட்டாளெனின், அன்னவள் பெருமையின் அருமையை உணரவல்லவர் உய்ந்தார்.

இலக்குவன் சீற்றத்தினின்று தம்மைக் காக்கத் தாரை உளள் என்பதறியாமல், வெருவிய வானரங்கள் நகரவாயிலைத் தாளிட்டு மலைகளையடுக்கித் தடுக்க முயன்றனவாகிப் பின்னும் உட்புகுவானாயின் அவனைப் புடைத்தற்குரிய சூழ்ச்சியுடன் நிற்றலும்,

காக்க வோகருத் தென்று கதத்தினாற்
பூக்க மூரற் புரவலர் புங்கவன்
தாக்க ணங்குறை தாமரைத் தாளினால்
நூக்கி னானக் கதவினை நொய்தினின்

[அரசரிடையே காளைபோன்ற இலக்குவன், என்னைத் தடுக்கவோ இதுசெய்தது என்று கோபத்தினால் சிரிப்புத் தோன்ற, இலக்குமி வசிக்கின்ற செந்தாமரை போன்ற தன் பாதத்தினால் அக்கதவினை எளிதில் தள்ளினான்.]

§ இவ்விடயம், 4-வது வால்யூம் 527-வது பக்கத்தில் விளக்கப்பெற்றிருக்கின்றது.

காவன் மாமதி லுங்கத வுங்கடி
மேவும் வாயி லடுக்கிய வெற்பொடுந்
தேவு சேவடி தீண்டலுந் தீண்டரும்
பாவ மாமெனப் பற்றழிந் திற்றவால்

[தெய்வத்தன்மை பொருந்திய இலக்குவனது சிவந்த பாதம் பட்டவளவில், காவலாக அமைந்த பெரியமதிலும் கதவும் காவல்பொருந்திய வாயிலில் அடுக்கியிருந்தமலைப் பாறைகளும், தீண்டுவதற்குஅரியபாவங்களென்னப் பற்று விட்டு அழிந்தன.]

அப்பொழுது உள்ளிருந்த வானரங்கள் வெருக் கொண்டு பேராரவாரஞ்செய்தனவா யகன்றோடவே, தாரையைச் சுற்றிநின்றவர், "என்ன செய்வது, எய் தினன்' என்றனர். தன் மாதர்குழாத்தொடு தாரை அரண்மனைவாயிலை வழிமறித்து நின்றால், தூய்மை யுந் தகவும் வாய்ந்த வீரனும் இலக்குவன் அவர்களைக் கடந்துசெல்ல நாணுவா னென்ன வோர் உபாயம் அனுமன் கூறினான். தாரையும் அதற்கு உடன்பட்டு அங்கதன் அனுமன் முதலியோரை அகலப்போக்கி, மாதர்குழாத்தினோடுஞ் சென்று, அரசவீதியில் ஏகிய இளையவீரனை வளைத்துக்கொண்டனள்.

ஆர்க்குறு புரங்கள் பேரி
யல்குலாந் தடந்தே ரொத்த
வேற்கண்வெம் புருவம் போர்வில்
மெல்லியர் வளைந்த போது
பேர்க்கருஞ் சீற்றம் பேர
முகம்பெயர்ந் தொதுங்கிற் றல்லால்
பார்க்கவு மஞ்சி னானப்
பணையினு முயர்ந்த தோளான்

[ஒலிக்கின்ற சிலம்புகள் பேரிகைகளாகவும், அல்குல் பெரிய தேராகவும், ஒன்றோடொன்று ஒத்திருக்கின்ற கண்கள் வேல்களாகவும், கொடிய புருவங்கள் போர்க்கு உரிய வில்களாகவும் அமைய, அம் மாதர் சேனை சூழ்ந்த பொழுது, அளவு கடந்து, பருத்திருக்கின்ற தோள்களை யுடைய இலக்குவன், பிறரால் மாற்றமாட்டாத தன் கோபம் தானேநீங்க, அவன்முகம் தானே மாறித் திரும்பியது அல்லாமல், அம்மகளிரை எதிர்நோக்கவும் அஞ்சினான்]

அனுமன் எண்ணிய இச்சிறுசூழ்ச்சி தவறவில்லை. வீரர்முன் வீரனாய் விஞ்சுவான் இவ்விலக்குவன் மா தர்முன் நின்றநீர்மை நகையுறச்செய்து அன்னவனை நமக்கு அதிகமும் அருமையாக்குகின்றது.

தாமரை வதனஞ் சாய்த்துத்
தனுநெடுந் தரையி னூன்றி
மாமியர் குழுவின் வந்தா
னாமென மைந்த னிற்பப்
பூமியி லணங்க னார்தம்
பொதுவிடைப் புகுந்து பொற்றோள்
தூமன நெடுங்கட் டாரை
நடுங்குவா ளினைய சொன்னாள்

[தாமரை போன்ற தன் முகத்தைச் சாயவைத்து, வில்லைப் பெரிய தரையில் ஊன்றவைத்து, மாமியர் கூட்டத்திடையே வந்த மருகன் என்னக் கூச்சமுடன் இலக்குவன் நிற்க, அழகிய தோள்களையும் தூய்மையான மனத்தையும் பெரிய கண்களையும் உடைய தாரையானவள், பூமியில்இறங்கிய தெய்வமாதர்போன்ற அவ்வானரமாதர் கூட்டத்தில் புகுந்து ஒதுங்கி, நடுங்குபவளாய்ப் பின்வருமாறு கூறினாள்.]

அந்தமில் கால நோற்ற
ஆற்றலுண் டாயி னன்றி
இந்திரன் முதலி னோரால்
எய்தலா மியல்பிற் றன்றே
மைந்தநின் பாதங் கொண்டெம்
மனைவரப் பெற்று வாழ்ந்தேம்
உய்ந்தனம் வினையுந் தீர்ந்தேம்
உறுதிவே றிதனி னுண்டோ

[மைந்தனே, அளவற்ற காலம் தவம் செய்த பாக்கியம் உண்டானால் அல்லாமல், உனது வரவு இந்திரன் முதலியவர்களாலும் அடையக்கூடிய தன்மையுடையது அன்று. அவ்வாறாக, உன் பாதங்கொண்டு நீயே எமது வீட்டிற்கு வரப்பெற்று நாங்கள் வாழ்ந்தோம், உய்ந்தோம், எங்கள் வினைகளும் தீர்ந்தவர்கள் ஆனோம்; இதனைவிட நாங்கள் அடையக்கூடிய நற்பயன் வேறு உண்டோ.]

வெய்தினீ வருத னோக்கி
வெருவுறுஞ் சேனை வீர
செய்திதா னுணர்கி லாது
திருவுளந் தெரித்தி யென்றாள்
ஐயநீ யாழி வேந்த
னடியிணை பிரிக லாதாய்
எய்திய தென்னை யென்றா
ளிசையினு மினிய சொல்லாள்

[வீரனே, நீ கோபமுடன் வருவதைப் பார்த்து, அதன் காரணத்தை அறியாமல் வானரசேனை அஞ்சுகின்றது; அவ்வச்சம்தீரும்படி உனது உள்ளக்கருத்தைத் தெரிவிப்பாய், என்று கூறினாள். மீண்டும், இசையைக் காட்டிலும் இனிமையான சொற்களைப் பேசும் தாரை, ஐயனே, ஆக்ஞாசக்கிரமுடைய இராமனது திருவடிகளை ஒருபோதும் விட்டுப் பிரியாத நீ இங்குத் தனித்துவந்த காரணம் யாவதோ—என்று வினவினாள்]

மொழியின்மென்மையும் குரலினயமும் சேர்ந்து, அவைகளுக்குடையவர் யாரென நோக்குமாறு இலக்குவன் உணர்வினைத் தூண்டின.

ஆர்கொலோ வுரைசெய் தாரென்
றருள்வரச் சீற்ற மங்காப்
பார்குலா முழுவெண் டிங்கள்
பகல்வந்த படிவம் போலும்
ஏர்குலா முகத்தி னாளை
இறைமுக மெடுத்து நோக்கித்
தார்குலா மலங்கன் மார்பன்
தாயரை நினைந்து நைந்தான்

[மலர்கள்அடர்ந்த மாலையையணிந்துளமார்பையுடைய இலக்குமணன், கருணைசுரக்கவே கோபம்தணிந்து, இவ்வார்த்தைகளைப் பேசினவர் யார் என்று அறியக் கருதி, விளங்குகிற வெண்மையான பூரணசந்திரன் பூமியின்கண் வந்த தோற்றம்போல ஒளி மழுங்கிய அழகுடைய முகத்தையுடைய தாரையை, முகம் சிறிது நிமிர்ந்து பார்த்துத் தன் தாய்மாரை நினைந்து தளர்வானான்]

இலக்குமணன் தன் தாயரை நினைந்திருக்கும்படி தாரையின் தோற்றம் அமைந்திருந்த தன்மை கம்பரால் அரிதின் உரைக்கப்பெறுகின்றது.

மங்கல வணியை நீக்கி
மணியணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக்
குங்குமஞ் சாந்தங் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூகக்
கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல்
நயனங்கள் பனிப்ப நின்றான்

[திருமங்கலியத்தைநீக்கி, இரத்தினங்கள்பதித்த மற்ற ஆபரணங்களையும் அகற்றி,வாசனைபொருந்திய தேன்பெருகும் மாலையை விடுத்து, குங்குமமும் சந்தனமும் பூசாத முலைகளோடு, பாக்குமரம்போன்றகழுத்தும்மறையும்படி மேலாடையால்போர்த்துள்ள தாரையைப் பார்த்த வள்ளலாகிய இலக்குவன் கண்கள் நீர்சொரிய நின்றான்]

மாபெரும் வாலியின் கற்பினாள் தான் தான் என்னக்கைம்மைக் கோலம் கைவந்துநின்றனள் தாரை. அன்னவளைக் கண்ட இலக்குவன்,

இனையரா மென்னை யீன்ற
இருவரு மென்ன வந்த
நினைவினா னயர்ப்புச் சென்ற
நெஞ்சின னெடிது நின்றான்
வினவினாட் கெதிரோர் மாற்றம்
விளம்பவும் வேண்டு மென்றப்
புனைகுழ லாட்கு வந்த
காரியம் புகல்வ தானான்

[என்னைப்பெற்ற தாயார் இருவரும் இப்படியே இருப்பார் என்று தோன்றிய நினைவினால் அயர்வடைந்த மனம் உடையவனாய் நெடுநேரம் ஒன்றும் பேசாதவனாகி நின்று, பிறகு, தன்னை வினவியவளுக்கு உத்தரமாக ஒரு வார்த்தை சொல்லவும் வேண்டும் என்பதை எண்ணி, அழகிய கூந்தலையுடையஅத்தாரைக்கு, தான் வந்த காரியத்தைச் சொல்லலானான்]

கம்பருக்கும் இலக்குமணனுக்கும் இங்கொரு சிறு கருத்துவேற்றுமை காணப்படுகின்றது. தாரையைக் கண்ட இலக்குமணன் தன் "தாயரைநினைந்து நைந்தான்" என்று கம்பர், கோசலை கைகேசி சுமித்திரை ஆகிய அம்மூவரையும் இவனதுகருத்தினிற்சேர்க்க முயன்றாரேனும், இவனோ, இணங்காது மறுப்பான் என்ன, இருவரையே தன்னை யீன்றாராக நினைப்பவனாகின்றான். மூவர்தாம் இருவரானால் கழிக்கப்பெற்றவள் அக்கைகேசியேயாதல்வேண்டுமென்பதில் ஐயமில்லை. சூழ்ச்சியுடைய அவ்விமையவர் செய்த மாயையால் தன் தூயசிந்தைதிரிந்து அதனால் அனைத்தையுங் கெடுத்துத் தானும் அவலமாகிக் கிடக்கின்றவொரு பேதை கைகேசி இழைத்த பிழை இரங்குவதற்குரியதேயன்றிச் செற்றமுறக் கடிதற்குரியதன்று என்னுந் தன்மைபற்றி அவளை இவ் விளையகாளையுடன் தாயுறவும் நன்னட்பும் மெல்லமெல்லச் செய்துவைக்க இக்கவிவரர் சிந்தித்தாலும், தன் முன்னவனுக்குக் கோளிழைத்த கொடியோள் என்னும் வெகுளி எஞ்ஞான்றும் மாறமாட்டா மனமுடைய இச்செம்மல்பால் அது செல்லுதல் அருமை. "கணவனை யிழந்த துயரினோடும், கைம்மையை அரிதிற் பூண்ட கோலத்தோடும், நிற்கின்ற இத்தாரை, மைந்த, நின் தாயரை ஒக்கின்றாள் காண்" என்று கம்பர் அவனதுகருத்தினுள்மெல்லமெல்லக் கைகேசியையும் சேர்க்கமுயலுமளவில், இவன், "புலவரே சற்றே பொறும். என்னையீன்ற இருவரே இனையராவார்" எனக் கடிதுதடுத்து உரைசெய்துவிடுகின்றான். ஏனிது? ஆறாக் கோபம் அவள்பால் பூண்டவனாயிருக்கலா மிவன். எனினும், வாலியை இழந்துள தாரையினளவு துன்பக்கோலம், தயரதனை இழந்த கைகேசியினிடம் காணவில்லையோ! வனத்தின்கண் இராமனைத்தேடியடைந்த பரதனோடு இம்மங்கையர் மூவரையும் தனதுகண்களாற் கண்டுளன் இலக்குவன். அப்பொழுது அவள்நிலை இவன் மனத்தில் எழுப்பிய எண்ணமே இன்னும் நீங்காமல் நிற்கின்றது போலும். தன் அன்னையை அருவருத்த பரதன், அந்நாள்,

படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கு
முயிர்ப்பாரங் குறைந்து தேய
உடலெலா முயிரில்லா வெனத்தோன்று
முலகத்தே யொருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை யறிந்திலையேல்
இந்நின்றா ளென்னை யீன்றாள்.

[துன்பங்களை யெல்லாம் உண்டாக்கினவளும், பழியை உலகத்திற்கு வளர்த்துவைக்கும் செவிலித்தாய் போன்றவளும், தன் பாழும் பாவி வயிற்றிலே வெகுநாள் கிடந்த எனக்கும் உயிர்ப்பாரம் தேய்ந்துபோகச் செய்தவளும், இவ்வுலகிலுள்ள உடல்களெல்லாம் உயிரற்றனபோலத் தோன்றும்படி புரிந்தவளும், இத்தகையஉலகில், யாதும் துன்பக்குறியில்லாதமுகத்தையுடையவளும்ஆகிய இவளை நீ யறியாயாயின், என்னைப் பெற்றவள் இவள்தான்]

என்று குகனுக்கு அறிமுகம் செய்துவைத்தபோது, பரதன் கண்ட அவ் விடரில்லா முகத்தையே சிறிது பின்னர் இலக்குவனுங் கண்டிருப்பான். கூனியின் சூழ்ச்சிக்கு இரையாகி உலகனைத்திற்கும் இத்துணைத் துன்பம் புகுவித்த தன் இழுதை அறிவினை எண்ணியெண்ணி உணர்வழிந்து உன்மத்தங் கொண்டாள் போல், மெய்ப்பாடு காட்டுதற்கும் திறனற்று நின்றவொரு பேதையை, பழிக்கும் இராமனுக் கிழைத்த பிழைக்கும் ஆற்றாமல் மதிமயங்கிய பரதன், அவள் உற்ற நிலையின் உண்மையை உணரமாட்டாமல், 'இடரில்லா முகத்தாள்' என்ன இழித்துப் பேசியவாங்கே, இலக்குவனும் அவ்விடரில்லாத் தோற்றத்தைப் பிழைபட மதித்திருத்தல் கூடுமாதலின், அங்ஙனமே இன்றளவுந் தாங்கிநின்று, தாரையுடன் அக் கைகேயியைச் சேர்க்காமல்மறுத்ததுஇயற்கையே. கைகேயியின் பேதைமையை அத்துணை நுட்பமாகச் சித்திரஞ் செய்துவிட்டு,அம்மிகவரிய நுட்பத்தினை அனைவரும் தெரிந்துகொள்வரென்று நம்புலவர் எதிர்பார்த்தார் போலும். இராமபிரான்பால் பரிவுமிக்க பரதனுக்கும் இலக்குவனுக்கும், அவளது இடரில்லாமுகம் மாத்திரம் தென்பட்டதே யொழிய அந்த முகத்திற்குப் பின்னிருந்த மனத்தின் வெறுமை விளங்கிற்றில்லை. சீற்றத்தால் சிந்தனைத்திறம் சிதைந்திருந்த இவ்விருவரும் கிடக்க, இவளாலன்றோ, இராமனது தோழ

மை தனக்கு வாய்த்தது என்ற நன்றியே மிக்கிருந்தானாதலின் குகன், இடரில்லாமுகத்தின் இரகசியத்தை உணர்ந்து,

> என்னக் கேட்டவ் விரக்க மிலாளையுந்
> தன்னற் கையின் வணங்கினன் தாயென

என்பர் கம்பர். கைகேசியின் இடரிலாமுகத்தினொடு உண்மைப்பொருளை உணர்ந்த குகன் அவளைத் தன் தாயெனக் கொள்ள விழைந்தனனாக, அப்பொருள் உணராத இலக்குவன், தாரையின் இணையினின்றும் தன் தாய்மார் வரிசையினின்றும் அவளை விலக்கலுற்றது வியப்பன்று. தம்முடையசித்திரநுட்பத்தில் கம்பர் தாமே சிக்கிக்கொண்டு இலக்குவனைக் கைகடக்க விட்டுவிட்டார்; இனி அவனுக்கு, "இருவரே இணையராவார்."

ஒத்தெல்லோ

["Shakespeare's —Othello"]

[184-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 2. களம் 1.

இடம்:—ஸைப்ரஸ் தீவிலுள்ள
ஒரு துறைமுகப் பட்டினத்தின்
கடற்கரையில் ஒரு மேடை.

மாண்டானோவும், நகரப்பெருமக்கள்
இருவரும் வருகின்றனர்.

மான்டானோ:—முனையிலிருந்து [1] கடலில் யாது தென்படக் காண்கின்றாய் ?

முதல் - நகரப் பெருமகன்:—ஒன்றுமே இல்லை: உயர உழைக்குமோர்வெள்ளம் இது. விண்ணிற்குங் கடலிற்கு மிடையே இதை யொன்றும் யான் காணகில்லேன்.[2]

மான்டானோ:—நிலத்திலேயே இக் காற்று இரைந்து பேசியுளதென்று எண்ணுகின்றேன் [3]; இதனினும் நிரம்பிய பெருவளி நம்கொத்தளங்களை அசைத்ததில்லை[4]. இப்படியே இது கடலின்மீதும் கடுமை செய்திருக்குமாயின், கருவாலிப் பழுக்கள் எவை, மலைகளே அவை மீது கரையுங்கால், தம் காடியைக் கவ்விக்கொண்டிருத்தல் கூடும்[5]? இதனின்றும் யாது கேட்கலாவோமோ?[6]

இரண்டாம்-நகரப் பெருமகன்:—துருக்கியர் கப்பற்படையின் பிரிவு[7]: நுரைத்த இக்கரையின்மீது நின்றுபார்; தெழிக்கின்ற கல்லோலம் மழைமுகிலை எறிவதுபோல் தோன்றுகின்றது[8]; ஊதையின் விதிர்த்த ஓதம் உயரிய குரூரம் மிக்க உளையுடன், எரிகின்ற கரடிமீது நீரினை இறைத்து, என்றும் நிலைநின்ற துருவத்தின் காவற்காரர்களை அவிப்பதுபோல் தோன்றுகின்றது[9]. உற்கரிக்கும் வாரிதிமீதுஇன்னதோர் பெருந் தொல்லை நான் கண்டதில்லை. [10]

மான்டானோ:—துருக்கியர் கப்பற்படை ஒதுங்கு மிடங்கண்டு கடலுள்காக்கப்படவில்லையாயின் அவை முழுகிவிட்டன. இதனைத்தாங்கித் தப்புவதென்பது சற்றேனும் இயலாது.

[மூன்றாம் நகரப் பெருமகன் வருகின்றான்]

மூன்றாம் - நகரப் பெருமகன்:—செய்தி! இளைஞர்காள், நம் யுத்தங்கள் முடிந்துவிட்டன. துருக்கர் தம்

முதல் அங்கத்தின் நிகழ்ச்சிகள், வெனிஸ் நகரத்தில் நிகழ்ந்தன. இனி, இந்நாடக நிகழ்ச்சிகளுக்கு இடமாயிருப்பது ஸைப்ரஸ் தீவு. இதற்கு அதிகாரியாயிருப்பவன், மான்டானோ. இவனுக்குப் பதிலாகத்தான் ஒத்தெல்லோ அனுப்பப்படுகின்றான். ஒத்தெல்லோவின் வருகையை எதிர்பார்த்து, மான்டானோ முதலானவர் கடற்கரையில் நிற்கின்றனர். கடுங்காற்றினால்கடல்கொந்தளிக்கின்றது.

(1) முனை - கடலிற்குள்முனைபோல் சென்றிருக்கின்ற நிலப்பாகம்.

(2) இதை-காற்றுக்கப்பலில் கட்டியிருக்கும் பாய்;இங்குச் சினையாகுபெயராய்க் கப்பலையே குறிக்கின்றது.

காற்றினால் கடலலைகள் ஓங்கியெழுவதால் கப்பல்ஒன்றும் கண்களுக்குத் தென்படவில்லை— என்பதுபொருள்.

(3) காற்று நிலத்தின்மீதே மிகவும்ஆரவாரமாக அடித்திருக்கின்றது.

(4) பெருவளி - பெருங்காற்று. நிரம்பிய - மிகுந்த.

(5) இக்காற்று, நிலத்தின்மீது அடித்த அத்துணை கடுமையாகக் கடலிலும் அடித்திருக்குமாயின்,எந்தக்கப்பல்தான் உடையாமல் தப்பியிருக்கக்கூடும் - என்பது பொருள்.

கருவாலி - ஒருவகை மரம். பழுக்கள் - விலா எலும்புகள். கப்பலின் பலகைகளைத் தைப்பதற்கு மரச்சட்டங்கள், வரிசையாக வளைத்து அமைக்கப்படுவதால், அவை மனிதரது விலாஎலும்புகள்போலத் தோன்றுவதுபற்றிக் கருவாலிப் பழுக்கள் என்று அழைக்கப்படுகின்றன.

மலைகளே அவைமீது கரைதல்-மலைபோன்று எழுந்த அலைகள் அப்பழுக்களின்மீது விழுந்து கரைதல்.

இப்படி அலை அடிக்கும்போது எந்தப் பழு தன் காடியைக் கவ்விக்கொண்டிருக்கும் - என்று சேர்த்துக் கொள்க.

காடி என்பது, ஒரு மரத்தை இன்னொரு மரத்தோடு சேர்ப்பதற்குத் தச்சர் செய்யுந் துவாரம்.

பழுக்களெல்லாம் தம் பிணிநெகிழ்ந்துசிதைந்துவிடும்; ஆகையால், எந்தக்கப்பலும் இந்தக்காற்றிற்கும் கடலின் கொந்தளிப்பிற்குந் தப்பமுடியாது - என்பது பொருள்.

(6) இந்தக் காற்றின் காரணமாக, என்னவென்ன தீங்குகள் நேர்ந்தனவென்று இனி நாம் கேள்விப்படுவோமோ, தெரியவில்லையே - என்று கவல்கின்றான்.

(7) யாதுகேட்கலாவோமோ, என்று மான்டானோமுடித்ததற்குப்பதில் இது. துருக்கியர் கப்பற்படையெல்லாம் நிலைசிதைந்து பிரிந்துபோய்ப் பயனற்றதாயிற்று என்ற நல்ல செய்தியே கேள்விப்படுவோம் - என்பதுபொருள்.

(8) நுரைத்த - நுரையடர்ந்த. தெழிக்கின்ற - சினங்கொண்டு வைகின்ற. கல்லோலம்- பெரிய அலை. எறிவது - வீசி அடிப்பது.

(9) ஊதையின் விதிர்த்த ஓதம் - கடுங்காற்றினால் நடுங்குகின்ற அலை. உளை - குதிரையின் பிடரிமயிர் - உயர்கின்ற அலை, தாவும் குதிரைபோலவும், அலையினதுநுனியில் சுருள்கின்ற நுரை, குதிரையினது பிடரிமயிர் போலவும் கூறப்பட்டிருக்கின்றன.

எரிகின்ற கரடி - மேல்நாட்டு வானசாஸ்திரத்தின்படி ஒருவகை நக்ஷத்திர இராசி, பெருங்கரடி என்று அழைக்கப்படும் - வானத்திலுள்ள பிரகாசிக்கின்ற கரடியென்னும் இராசி.

துருவம் - வடமீன், இது சிறுகரடி என்று அழைக்கப்படும் மற்றொருஇராசியில் உள்ள ஒரு நக்ஷத்திரம். அதன்

சூழ்ச்சிதடைபட்டு நிற்கும்படி இந்தத்தடுப்பதற்கரிய கடுங்காற்று அவர்களை மோதி யடித்திருக்கின்றது: அவர்தம் கப்பற்படையின் பெரும்பகுதி கொடிது சிதைந்து வருந்தியதை வெனிஸ்நகரத்துப் பெருந்தகைக் கப்பலொன்று கண்டது [12].

மான்டானோ:—எப்படி! இது நிச்சயமோ?

மூன் - நக - பெரு:—அக்கப்பல் வந்துசேர்ந்திருக்கின்றது; விரோனாவைச் சேர்ந்தவன், மைக்கேல் காஸ்ஸியோ என்பவன் ஒருவன், போர்வீர மூரன் ஒத்தெல்லோவிற்கு அடுத்த அதிகாரி, தரையை அடைந்துளன்; மூரனோ கடலில்வந்துகொண்டிருக்கின்றான், இங்கு ஸைப்ரஸ்ஸிற்கு முழு அதிகாரமும் அளிக்கப்பெற்றுளன் [13].

மான்டானோ:—அதுபற்றி மகிழ்கின்றேன். தகவுடைய அதிகாரி அவன் [14].

மூன் - நக - பெரு:— எனினும், இந்தக் காஸ்ஸியோ, தருக்காத நஷ்டத்தைப்பற்றி ஆறுதல் உண்டென்றுபேசுகின்றான் ஆனாலும், துயருடையதோற்றத்தனாகி, அம் மூரன் தீதிலனாகவேண்டுகின்றான்; ஏனெனில், கொடிய கடிய காற்றினால் அவர் பிரிக்கப்பெற்றனர் [15].

மான்டானோ:— அன்னதே அவன் ஆக விண்ணவரை வேண்டுவோம் [16]; நான் அவன்கீழ் உத்தியோகம் செய்துளேன். முழுச்சேவகமுடையவொருவீரனெனத் தலைமைநடத்துகின்றான் அவன். வாருங்கள்! வந்துசேர்ந்த கப்பலைக் காண்பதுடன், பரவையும் ஆகாயநீலமும்தெளிவற்றதோற்றமாய்த் தீரும்வரை, வீர ஒத்தெல்லோவிற்கு நமது கண்களை வீசவும், கடற்கரைக்குச் செல்வோம். [17]

மூன்-நக-பெரு:—வாருங்கள் அப்படியே செய்வோம். இன்னமும் வருவதை எதிர்பார்ப்பது ஒவ்வொரு நிமிடமும். [18]

[காஸ்ஸியோ வருகின்றான்.]

காஸ்ஸியோ:—மூரனை இவ்வளவு அங்கீகரிகின்ற இந்தப் போரின் வீரமுடைய தீவினுள்ள திறமைசாலிகாள், வந்தனம்—ஹோ! ஆபத்தான கடலில் நானவனை இழந்துளேன்; பூதங்களுக் கெதிராக [19] விண்ணவரே அவனுக்குக் காவல் அளிப்பாராக.

மான்டா:— நல்ல கப்பல் உடையனோ?

காஸ்:—பருத்தமரத்தது அவன்கப்பல்; மீகானும் திறமையின் நன்கு அங்கீகரிக்கப் பெற்றவன் [20]; ஆதலின், மட்டுக்குவிஞ்சி மாளும்வரை மாந்தியில்லா என்றன் நம்பிக்கை துணிவுடைய நலத்தின்கண் நிற்கின்றது. [21]

[உள்ளே] கப்பல், கப்பல், ஒருகப்பல்!

[நான்காம் நகரப் பெருமகன் வருகின்றான்.]

காஸ்:—என்ன அரவம்?

நான்-நக-பெரு:—இப்பட்டினம் ஆளற்றதாகிவிட்டது; பரவையின் புருவத்தில் சனங்கள் வரிசைவரிசையாக நின்று, 'கப்பல்' என்று கத்துகின்றனர். [22]

பக்கத்தில் உள்ள இரண்டுநக்ஷத்திரங்கள் காவற்காரர்கள் என்று அழைக்கப்படும். இவைகளைக்கொண்டேபண்டை நாட்களில் மாலுமிகள் திசையறிந்து கப்பல்களைச்செலுத்தினர்.

இராசிமண்டலம் வரையில் அலைகள் எழும்புகின்றன என்பது இவ்வாக்கியங்களின் பொருள்.

(10) உற்கரிக்கும் வாரிதி - கொந்தளிக்கும் கடல். தொல்லை - கடுங்காற்றால் உண்டான அலைப்பு.

(11) தோழர்களை இளைஞர்என்று அழைப்பதுஆங்கில இராணுவ மரபு.

(12) கப்பல் கண்டது வெனிஸ் நகரத்திலிருந்துவந்தவொரு கப்பலில் இருந்தவர் கண்டார். பெருந்தகைக் கப்பல் - பெருமைவாய்ந்த தோற்றமுடைய கப்பல்.

(13) ஸைப்ரஸ்ஸிற்குக் கவர்னராக நியமிக்கப்பெற்று வருகின்றான் - என்பது பொருள்.

(14) ஒத்தெல்லோவின் பெருந்தகைமை வீரம் முதலிய குணங்களை அனைவரும் பாராட்டிப் பேசுவது குறித்துக்கொள்ளத் தக்கது.

(15) கடுங்காற்றினால் தருக்காத கப்பற்படை சிதைவுண்டதுபற்றி அவனுக்குச் சந்தோஷமே யானாலும், ஒத்தெல்லோ இருந்த கப்பல் யாதுஆயிற்றோ என்னும்கவலை உடையவனாகவும் இருக்கின்றான் - என்பது பொருள்.

(16) ஒத்தெல்லோவிற்கு யாதும் தீங்கு நேரலாகாது என்று நாமும் தெய்வங்களை வேண்டுவோம் - என்பது பொருள்.

(17) வந்துசேர்ந்த கப்பலைக்காணவும், ஒத்தெல்லோவின் கப்பல் வருகின்றதோ வென்று பார்க்கவும், கடற்கரைக்குப் போவோம், வாருங்கள்-என்பது பொருள்.

பரவை - சமுத்திரம். கடலும் ஆகாயம் ஒன்றாய்க் கலந்துதோன்றும்வரையில் நாம் நமதுபார்வையைச் செலுத்திப் பார்ப்போம்—என்கின்றான்.

(18) ஒவ்வொரு நிமிடமும் இன்னும் யாரேனும் கரை வந்து சேரலாம் என எதிர்பார்த்திருக்கவேண்டியவேளை இது - என்பது பொருள்.

(19) பூதங்கள் - பஞ்ச பூதங்களில் இரண்டாகிய, காற்றும் கடல்நீரும்.

(20) கடுங்காற்றையும் கடலின் வன்மையையுந் தாங்கக் கூடியது அவன் ஏறிவரும் கப்பல். அன்றியும், கப்பலோட்டியும் மிக்க திறமைசாலியென்று நன்கு மதிக்கப்படுபவன்—என்பது பொருள்.

(21) ஆகையால், ஒத்தெல்லோ தப்பிப் பிழைப்பான் என்னும் நம்பிக்கை யுடையவனாக இருக்கின்றேன்—என்பது பொருள்.

நலத்தின்கண் நிற்கின்றது - ஒத்தெல்லோவிற்கு நன்மையுண்டாகுமென்று எண்ணி நிற்கின்றது.

சினவேல், என்பதிற் போல, துணிவுடைய நலம் என்னுமித்தொடரில், துணிவுடைய என்னும் அடையை, நம்பிக்கை என்பதுடன் சேர்த்து மாற்றிக்கொள்ளல் வேண்டும். அப்பொழுது, என் துணிவுடைய நம்பிக்கை நலத்தின்கண் நிற்கின்றது, என்று ஆகும். ஒத்தெல்லோ அகப்பட்டுக்கொண்டிருக்கின்ற காற்றின் கடுமையை நினைக்குங்கால், அவன் தப்புவது அரிதென்னும் அச்சமே அதிகம் எழும்; ஆயினும் அவ்வச்சத்தையுங் கடந்து, அவன் தப்புவான் என்று நம்பத் துணிகின்றேன்—என்பது பொருள்.

இந்தத் துணிவுகொள்வதற்கு இயல்வதாகின்ற காரணத்தை, 'மட்டுக்குவிஞ்சி மாளும்வரை மாந்தியில்லா' என்னுஞ் சொற்கள் குறிக்கின்றன. "ஒத்தெல்லோவிற்கு யாது நேருமோவென்னும் பயத்தை அதிகம் உண்டிருக்கின்றது என் நம்பிக்கை. ஆயினும் அந்நம்பிக்கை அடியுடன் மாண்டுவிடும் வரையில் மிதமிஞ்சிப் பயமுண்டதில்லை. ஆகையால் இன்னுஞ் சிறிது நம்பிக்கையிருக்கின்றது. அதனைக்கொண்டு, ஒத்தெல்லோ தப்பலாம் என்று நம்பத் துணிகின்றேன்—என்பது பொருள்.

(22) பரவை—கடல். புருவம்-கரையில் புருவம்போல மேடாக உயர்ந்திருக்கின்ற இடம்.

(23) அவரை - கப்பலில் வருகின்றவரை. ஆட்சித்தலைவர் - கவர்னர். இக்கப்பலில் வருபவர், இத்தீவிற்கு ஆட்சித்தலைவராய் நியமிக்கப்பட்டுள்ள ஒத்தெல்லோவே என நம்புகின்றேன்—என்பது பொருள்.

(24) வந்தனம் கூறுவதற்கு அடையாளமாகப் பீரங்கி வெடிக்கப்படுகின்றதாதலால், வருவது ஒத்தெல்லோ தான் அல்லனாயினும், நம்மைச்சேர்ந்தவராகவே இருக்கவேண்டும்; பகைக்கப்பல் அன்று அது—என்பது பொருள்.

காஸ்:—எனது நம்பிக்கை அவரை ஆட்சித்தலைவராகவே உருச் செய்கின்றது.[23]

[பீரங்கி வெடி கேட்கின்றது]

இர-நக-பெரு:-வந்தனத்தின் வெடியினை விடுகின்றனர்: நம் நண்பரேனும் ஆவர்.[24]

காஸ்:—ஐயா, நீர் சென்று, வந்திருப்பது யாவரென்ற உண்மையை எமக்குக் கொணர்க.

இர-நக-பெரு:—கொணர்கின்றேன்.

[போகின்றான்]

மான்டானோ:—மற்று, உபத்தலைவ, உன் தலைவர் மனைவியினரோ?

காஸ்ஸி:-நனிமிக அதிர்ஷ்டமே[25]: வருணனையையும் கட்டுக்கடங்காப் புகழையும் கடந்து நிற்கும் வீறுடைய மாதொருத்தியைச் சாதித்திருக்கின்றார்[26]. மிகவே புனைந்து விளம்புகின்ற எழுதுகோல்களின் மொழிகளின் திறமனத்தையும் விஞ்சுகின்றவள்[27]. படைப்பின் சாரமான உடுப்பினில் அவள், சூழ்ச்சித்திறமுடைய புலவனைக் களைப்படையச் செய்கின்றாள்.[28]

(25) ஒத்தல்லோவிற்கு மனைவி உண்டோ என்று மான்டானோ கேட்டதற்கு, காஸ்ஸியோ, மிக்க அதிர்ஷ்டவசத்தினால்சிறந்த நல்லஒருமனைவியைப் பெற்றிருக்கின்றான், என்று டெஸ்டிமோனாவின் நலன்களைப் புகழ்ந்து கூறுகின்றான்.

(26)வீறு-வேறு ஒன்றிடத்துமில்லாதசிறப்பு. சாதித்து இருக்கின்றான்-மனைவியாக அடைந்திருக்கின்றான். எத்தனைதான் வருணித்தாலும் எவ்வளவுதான் மிகுதியாகப் புகழ்ந்தாலும் அத்தனையுங் கடந்த சிறப்புடையவள்-என்பது பொருள்.

(27) எழுதுகோல்-பேனா. எத்தனை புனைந்து எழுதினாலும் அத்தனையுங் கடந்த நலத்தவள் - என்பது பொருள்.

(28) படைப்பின் சாரமான உடுப்புக்கள்-செயற்கையாலன்றி இயற்கையாகவே அவளுக்கு அமைந்துள்ளஅழகு குணம் முதலியன. உடுப்பு, என்பது அவளது குணம் அழகு முதலியவைகளை இங்குக் குறித்திருக்கின்றது. படைப்பின் சாரமான உடுப்பு-பிறப்போடு இயற்கையாயமைந்தநலன்கள்,அவளை அலங்காரம்செய்கின்றன.அந்த இயற்கை நலன்களை வருணிக்க முயன்று முயன்று எட்டமாட்டாமையால், மதியின் சூழ்ச்சித்திறமை வாய்ந்த புலவர்களும் களைப்படைந்து சோர்ந்துவிடுகின்றனர்.

கம்பர் சிருட்டியில் பிறந்த கற்பினாள்

அகலிகையின் பூர்வ விருத்தாந்தம்:—நான்முகக் கடவுளின் திருமகள் அகலிகை. அவள் மிக்க அழகு உடையவள். அவளைத் தேவர்கள்முதல் அனைவரும் தந்தமக்கே வேண்டுமென விரும்பினார்கள். தேவேந்திரனும் பெரிதும் விரும்பினான்.ஆயினும் கௌதமர் என்னும் மாபெரும் தாபதருக்கு இல்லக்கிழத்தியாயினாள். இவ்வரலாறு இரண்டுமூன்றுவிதமாக நூல்களில் வழங்கிவருகின்றன.அவையாவன: ஒன்று—அகலிகையை யெல்லோரும்தத்தமக்குவேண்டுமென விரும்பியதால் பிரமதேவன் அனைவரையும் விளித்து 'நீங்களனைவரும் ஒருங்கே நீரில் மூழ்கி உங்களில் யார்தான்கடைசியில் எழுந்திருக்கிறாரோ அவருக்கே இப்பெண்ணைத் தருவேன்' என்றார். அதன்படி நீரில் மூழ்கியவருள் சுவாசத்தை அடக்கி எவரினும் கடைசியில்எழுந்தவர் கௌதமர்ஆயினதால் அவருக்கே அகலிகை கொடுக்கப்பட்டனள்.

மற்றொன்று—தேவேந்திரன் அகலிகையைத் தனக்குத் தரும்படி அடிக்கடி பிரமனைக் கேட்டுக்கொண்டிருந்தான். தேவர்கள் மகரிஷிகள் அனைவரும் அப்படியே கேட்டிருந்தார்கள். அனைவரையும் பிரமன் விளித்து,இருபுறமும் தலையுள்ளபசுவை எவர்பார்த்து மும்முறைவலம்வந்துவணங்கி என்முன் முதன்முதல் வருவாரோ அவருக்குத்தான் தருவேன்என்று அறிவித்தான்.அதன்படிதேவேந்திரன்தேடித்திரிந்து கொண்டிருக்குங்கால், நாரதருடைய யுக்தியினாலேயும் அனுக்ரகத்தினாலேயும் கன்று ஈனும் தறுவாயில் இருந்தவொரு பசுவைக் கௌதமர் தரிசிக்கப்பெற்றுப் பிரமன்பால் சென்று தெரிவித்து அகலிகையை மணந்துகொண்டார்.

வேறொன்று — அகலிகையை அனைவரும் கேட்டுக்கொண்டிருக்கவும் யுக்தவயது வந்த அப்பெண்ணைப் பிரமன் கௌதமரிடம் ஒப்புவித்து "இப்பெண்ணை நீ பாதுகாக்கவேண்டும்: அவளுக்கு எந்தத்தீதும் வராலாகாது" என்று, தந்தார். அப்படியே சிலஆண்டுகள் ஜிதேந்திரியராகக் கௌதம ரகலிகையைக் காப்பாற்றிவந்தார். அதற்கு மகிழ்ந்த நான்முகன், இந்திரன் முதலானோர்க்குக்கொடுக்கவிரும்பாது கௌதமருக்கவளை மணம் புரிவித்தான்.

இன்னவாறு ஒவ்வொருகதையிலும்இவ்வரலாறு சிறிதுசிறிது மாறுபட்டிருப்பினும், இந்திரன் அகலிகையைக் காதலித்திருந்தான்என்பதும் அவளைத் தானடைதற்கு முயன்றானென்பதும், முடிவில் அவள் கௌதமருக்கு வாழ்க்கைத்துணையாயினாளென்பது மெல்லாக் கதைகளிலும் மாறுபடாத வரலாறாகும். இவ்வளவு போட்டி அகலிகைக்கு ஏற்பட்டதற்கு அவளுடைய அழகே காரணமாம்.

அகலிகையின் அழகு:—நான்முகன் உலகத்தின் படைப்பைப்பற்றி ஒரு நாள் சிந்தித்தபோது தான் உலகில் படைக்கின்ற பொருள்களனைத்தும்'அழகு' 'அழகின்மை' என்னப்படும் இரண்டும், சிறிதும்பெரிதும் கலப்புடையதாகவே அமைவது கண்டு, அவ்வாறின்றி மூவுலகத்தவரும் வியக்குமாறு ஒவ்வொரு பொருளினிடத்திலும் இருக்கிற அழகைமாத்திரம் எடுத்துத் திரட்டிய ஒரு பெண்ணுருப் படைத்திட வேண்டுமென்றெண்ணி அவ்வாறே மிகஅழகாகஒரு பெண்ணைப் படைத்தார். அப் பெண்ணுக்கு 'அஹல்யா' என்று அழகியதொரு காரணப் பெயர் வைத்தார். இந்தப்பெயர் விகாரம் இல்லாதவள் என்னும் பொருளைத் தரும். (ஹல்-விகாரம். ஹல்யா - விகாரமுடையவள், அஹல்யா-விகாரமில்லாதவள்)எனின், இச்சொல்லின்பொருளால் அவள் அழகின் ஏற்றம் என்ன ஏற்படுகிறதென்று ஐயுற வேண்டியுளது. 'விகாரமில்லாதவள்'என்றால் பேரழகியல்லள் என்பதே தோன்றும். எப்படியென்னில், ஒருவனைப் பார்த்து 'ஏழையல்லன்' என்றால், உலகில் புகழ்பெற்ற பணக்காரன் என்றுஅர்த்தமாகாது.உடைக்குமுணவுக்கும் குறைவில்லாதவன் என்றவரையிலும்தான் நினைக்கலாம்; லக்ஷாதிகாரி கோட்டீச்வரன் என்று நினைத்து விடமாட்டோம். அதைப்போல்'விகாரமில்லாதவள்' என்றவளவில் சற்று நிதானமான அழகுடையவள்

என்றே நினைப்போம். 'அகலிகை' என்ற இச்சொல்லுக்கு இப்பொருளாயின் இவளது அழகைப்பற்றி நாம் எழுதவே தேவையில்லை. நான்முகன் எல்லாப் பொருளிலும்உள்ள அழகையெல்லாம் திரட்டி இவளைப் படைத்தான்என்பதால் பேரழகி என்பது ஏற்படுகின்றது இவ்வுலக மாதர்களைக்காட்டிலும் படிப்படியாக, அழகிற்சிறந்தவர்கள் தேவதாஸ்த்ரீகள்; அவர்களிலும் அரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலானோர், அவர்களிலேயும்இந்திரனது மனைவிஇந்திராணி மிகப்பேரழகுடையவள். அவளது அழகினைத் துய்ப்பதற்கே நூறு அச்வமேதயாகங்களைச் செய்து இந்திராணிகொழுநன் ஆகிறான். ஒரு அச்வமேதயாகம் செய்வதற்கே நீண்ட ஆயுளும் பெரும் பொருளும் போராற்றலும்வேண்டும். இவ்வாறு நூறுசெய்வதென்றால் அதுஎல்லோராலும் அரிதிலும் செய்து முடிப்பதற்கு இயலுவதொன்றன்று. முடியுந் தறுவாயி லிடையூறுவந்து வீண்போவதோடு இழ்பிறவி கிடைத்தலும் உண்டு. இதற்கு நகுஷனது வரலாறே தக்க சான்றுஆகும். மிக முயற்சியும் பெரும் பொருளும்படைத்த நல்லூழ் உடையார்க்கே இந்திராணி போகம் கிடைக்கும். அத்தகைய இந்திராணிநலன் நுகரும் இந்திரன் இவ்வகலிகையின்மீது காதல்கொண்டானென்றால் அகலிகையினது 'அழகு' நம்மால் புகழும் தரத்ததாமோ? மேலும் சீதையின் அழகையெல்லாம் சூர்ப்பணகையால் சொல்லக்கேட்ட இராவணன், மாரீசனைக் கொண்டு இராமனை வஞ்சித்துச் சீதையை வவ்வுதற்கு எண்ணி மாரீசன்பால் உதவி வேண்டிவர, அவனை "எளியோரின் வந்த கருத்தென் சொல்லுதி'' என்று மாரீசன் கேட்கவும் "போர்செயலொல்லேன் உடன்வாழும் துப்பழி செவ்வாய் வஞ்சியை வெளவத் துணைகொண்டிட்டுஇப்பழி நின்றாற் றீரிய வந்தேன்இவண்''என இராவணன் புகலவே, மாரீசன் "சிச்சி யெனத்தன் மெய்ச்செவி பொத்தி'' "அந்தரமுற்றான் அகலிகை பொற்பாலழிவுற்றான்— இந்திர னொப்பார் எத்தனை யோர்தா மிழிபுற்றார்.'' என்று கூறுகின்றான். இதனில் இந்திரன் அகலிகையின் அழகினாலேதான் அழிவுற்றான் என்பதை "அந்தரமுற்றான் அகலிகைபொற்பா லழிவுற்றான்'' என மாரீசன்வாக்கில்வைத்து அகலிகைஅழகைக் கம்பர் நமக்கு வெளியிடுகின்றார். தவிர,

இவ்வகலிகையின் அழகு உபனிஷத்திலும்பேசப்படுகின்றது. எங்கெனில், பிரகஜ் ஜாபாலோபனிஷத்தில் காண்பதுஇது:- அகலிகைக்கும்கௌதமருக்கும் நன்மணம் நடக்கும்போது அவ்விடம் குழுமியிருந்த தேவர்களு மகரிஷிகளும் அனைவரும் அகலிகையின் அழகைக்கண்டு முழுதும் அறிவிழந்தவர் ஆனார்.இவ்விஷயத்தை, அவரெலாம் சிவபெருமானிடம்போய், "அருட்பரம்பொருளே! நாங்கள் அகலிகையின் திருமணத்திற்குச் சென்றிருந்தோம்.அவளழகினால்நாங்களனைவரும் அறிவிழந்தவர்களானோம். அப்பாவம் நீங்க அடிகள் அருள்புரிதல்வேண்டும்'' என்றுகேட்டுக்கொள்ளவும், சிவபெருமான் திருநீறுதந்து அவர்கள் அடைந்த அப்பாபத்தைப் போக்கினார்,'' என்று சொல்லப்படுகிறது. இதனால்பேரழகியாம்பெண்மணிகள் தாண்டவமாடும் தேவலோகவாசிகளான தேவர்களும் ஐம்புலன் அவித்த அறிவராம் மகரிஷிகளும் ஞானம் இழந்தவர்களானார்கள் என்றால் அகலிகையின் அழகுக்கு எல்லைதானுண்டோ? இத்தகைய அழகின் ஏற்றமுடைய ஒரு அகலிகைக்கு 'விகாரமில்லாதவள்' என்ற பொருளுடைய 'அஹல்யா' என்னும் பெயரை (அது நாம் நினைக்கின்றபடி ஒருசாதாரணமான ஒரு பொருளைத் தருவதாயின்)பிரம்மதேவன் வைப்பாரா ? பிரமன் சாதாரணமாகப் படித்தவரா? நான்கு வேதங்களும் ஓதியுணர்ந்தவ ரன்றோ? சப்தார்த்தம் கவனியாமலும் கூட, தேர்ந்து படைத்த அருமைப் பெண்ணுக்கு இப்படியும் பெயர் வைப்பாரோ? பிரமன் உயர்ந்த நோக்கத்துடனே, எல்லா அழகையும் திரட்டிப் படைத்தது போலவே சொற்களிலேயும் தேர்ந்து திரட்டிப் பெயர் வைத்திருக்க வேண்டும். உலகினில் எதை யெதை எடுத்துக்கொண்டாலும் அதனதனிலேயும் குறை சிறிதேனும் அமைந்ததாகவே இருக்கும்.ஒருவனை ஒப்பற்ற நற்குணங்கள் உடையவனென்று எவ்வளவு புகழ்ந்தாலும் தீக்குணமும்சிறிதேனுமவனிடம்இல்லாமலிருக்காது. இதனாலேயே நற்குண மிகை நோக்கி நல்லவனென்றும் தீக்குணமிகையைநோக்கித் தீயவனென்றும் அறியும்படி "குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்.'' என்றகுறட்பாவின்மூலம் செந்நாப் புலவர் நமக்குக் காட்டியுள்ளார். குணத்திலோ அழகிலோ, செல்வத்திலோ,செல்வாக்கிலோ முழுவதும் நிறைந்தவர் எங்கும், எப்போதும்,எவருமில்லை. ஆதலால் தம்மால் படைக்கப்பட்ட அகலிகைக்குச் 'சுந்தரி' 'சுந்தரேச்வரி'என்று எப்பெயரிட்டழைக்கினும் அழகின்மையும்சிறிதுபாகம் இருப்பதாக அச்சொல்லின் நுண்பொருள் த்வனிக்கும் என்பதை நினைத்த வேதியன் 'அஹல்யா' என்றோர் பெயர் வைத்தான். என்ன விசேடம் இதில் என்றால், பேரழகி என்று எவர் சொன்னாலும் அழகுக்கு ஓர் எல்லையில்லையாதலால் அழகின்மை சிறு பகுதி இருக்கத்தான் இருக்கும் என்றுநினைப்பார்கள்; இவள் அத்தகையள் அல்லள்: பேரழகிலேயும் அழகின்மை சிறுபகுதிகூட இல்லாதவள் என்று உலகினர்க்கு அறிவுறுத்தவே 'விகாரமில்லாதவள்' என்ற பொருளுடைய 'அஹல்யா' என்றபெயரை நிறுவினார். இவ்வடமொழிச் சொல் தமிழில் 'அகலிகை' என்று வழங்கும். இத்தகைய ஒரு சிறிதும் அழகின்மையில்லாத பேரழகிப் பெண்மணியாம் அகலிகை ஒருசிறிதும் பொய்யிலா மெய்யாளன் கௌதமரிடம் இல்வாழ்க்கைத்துணை யாயினாள்

(தொடரும்)

சூரியன்

[187-வது பக்கத் தொடர்ச்சி]

IV. ஆராய்ச்சிக் கருவிகள்

ஒளி உறிஞ்சு நிறவரிசை (Absorption spectrum):—தூரதிருஷ்டிக் கண்ணாடியால் காணுதற்கு அரிய சிலஉண்மைகளை ஒளியுடைப்பான் உதவியால் கண்டுபிடித்தனர். சூரியனுடைய ஒளிவரிசையை,இக்கருவிவழியேகாணும்போது,அதுதொடர்ச்சியாயிராமல், சில ஒளிகளைஉறிஞ்சிக்கொண்டு விளங்கக்காண்கின்றோம். இதனை ஒளி உறிஞ்சு வரிசை (absorption spectrum) என வழங்குவர். எனவே ஒளியைக் கிரகிக்கின்ற, இந்தஇயல்பு, சூரியப் பிழம்பைச்

சுற்றிலுமுள்ள இடத்தினுடையே இயல்பாதல் வேண்டும். சூரியனைச் சுற்றியுள்ள வாயுமண்டலத்திலே நிறைந்து பிரகாசிக்கின்ற ஆவிபோன்ற வாயுப் பொருள் இவ்வாறு ஒளியைஉறிஞ்சுகிறதாதல்வேண்டும். விஞ்ஞான சாஸ்த்திரிகள், இந்தக் கருவியின் உதவியினால், ஒரு முடிவிற்கு வந்திருக்கிறார்கள். சூரியனைச் சுற்றியுள்ளபொருள்கள் இவ்வாறு ஒளியையும்சூட்டையும் குறையச்செய்தலை யுணர்ந்த பண்டைத்தமிழோர் "பலமுனிவர்கள்சூரியனோடே ஓடி, சூட்டால் உலகம் அழியாதபடியும் ஒளியால் நாம்குருடாகாதபடியும் அவற்றைத் தம்மீது தாங்கிக்கொண்டு தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகத் திரிகின்றனர்" எனப் புனைந்துரைத்தனர்.

'நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுண வாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவர்'

புறநானூறு.

என்ற பாடலைக் காண்க. நமது பூமியில் உள்ள பல தாதுக்கள்(Elements)சூரியனிலும்இருக்கவேண்டுமென்றுஇக்கருவியின்உதவியால்அவர்கள்கண்டுபிடித்தனர். இத்தகைய ஆராய்ச்சியின் பயனாக, பூமியில் உள்ள சுமார் எழுபது தாதுக்களைச் சூரியனிலே இது வரையும் அவர்கள் கண்டுள்ளார்கள். இவ்வாறு கண்டுபிடித்துள்ள பொருள்களில், சூரியவாயு (Helium) என்பதும் ஒன்று. அது, பூமியிலே உள்ள தன்னியக்கமற்ற (Inert gas) பஞ்ச வாயுக்களில் ஒன்றாகும். இதனைக் கண்டுபிடித்த பிறகு, இதனால் மிக்க பயன் ஏற்பட்டுள்ளது.

சூரிய உஷ்ணமானி: — (Pyroheliometer) சூரியனைக் காண்பதற்கு, நமது ஊனக் கண்கள் போதா; ஆனால், இக் கருவிகளோ, நுட்பமான பொருள்களையும், நமக்கு எளிதிலே காட்டிவிடுகின்றன. மற்றைப்புலன்களால் அறிவனவற்றையும் ஆராயவேண்டாவா? நமது பஞ்சேந்திரியங்களில் சூரியனைக் கண்டறிவது கண் என்றும், உற்றுணர்வது மெய் யென்றும் யாவரும் அறிவர்.

மக்கண்மெய் தீண்ட லுடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.

என்பர் திருவள்ளுவர். சூரியனைக் காண்கின்ற இன்பத்தைவிட, அத்தந்தை, மக்களாகிய நம்மைத் தன் வெயிலாகிய கரங்கள்கொண்டு தழுவியபோது, நாம் உற்றறியும் இன்பமே அதிகம். இவ்வின்பம் இன்றேல், நாம் உயிர்பெற்று வாழ்வது அரிதாகும். சூரியன் பொழிகின்ற கதிர்களில் வெளிச்சமும் சூடும் இருத்தலோடு, ஒருவகை உற்சாகத்தைத்தரும் ஆற்றலும் (Energy) இருக்கிறது. இவ்வுற்சாகத்திற்கு மூலாதாரமாய் நிற்கின்ற பொருள், சூரியனிலிருந்து பாயும் சுடுகதிர்களே யாகும். எனவே சூரிய உஷ்ண ஆராய்ச்சி, மிகவும் இன்றியமையாததாகும். இதனை எவ்வாறு செய்துவருகின்றனர் எனக் காண்போம்.

சூரிய உஷ்ண முணர்த்தல்:—சூரியஉஷ்ணஆராய்ச்சிக் கருவியை உஷ்ணமானி என்பர். இதனை உலக வழக்கின்படி சூடளந்தான் என வழங்கலாம். சூரியனுடைய சீதோஷ்ண நிலைமை (Temperature) எத்தகையது என்று ஆராய்வது, நமது நிலவுலகிலே ஆராய்கின்ற முறையின்படி அன்று. வீட்டிலே ஜுரத்துடன் படுத்திருக்கின்ற ஒருவனுடைய தேகத்தின் உஷ்ணநிலை எவ்வாறுஉள்ளது என்று பார்க்கவேண்டுமானால், நாம் சுரமளந்தானை (Clinical Thermometer) அவனது வாயிலே வைத்துப் பார்ப்பது போலச் சூரியனுடையவாயினுள் வைத்து, அதன் சீதோஷ்ண நிலைமையை அறிய, ஒரு கருவியும் நமது நிலவுலகத்தே இல்லை. பூமியவ்வளவு பெரிய ஒருகருவியை, நாம் அங்கே எப்படியேனும் முயன்று எடுத்துச் சென்றாலும், சூரியனுடைய நாவிலே பட்ட மாத்திரத்தில், அக்கருவி, கருகி உருகி நீறாகிவிடும். இவ்வாறிருக்கவும், சூரியனுடைய சீதோஷ்ண நிலையை, விஞ்ஞான சாஸ்திரிகள் கண்டுபிடித்திருப்பது, இந்திர ஜாலச் சூழ்ச்சிதானோ என நமக்கு ஐயம் எழலாம். வான சாஸ்திரிகள் ஒவ்வொருவரும், கணிதத்தில் வல்லவர்கள். ஆதலின் இவர்கள் செய்வது கணித வித்தையேயன்றிக் கண்கட்டி வித்தையன்று. இயற்கையில் அமைந்துள்ள சில சட்டங்களைக் கண்டுபிடித்து அச்சட்டங்களின் உண்மைகளைப் பரீக்ஷித்துப் பின்னர், சூரியனுடைய சீதோஷ்ணநிலையை ஆராய, அவற்றைக் கையாண்டு கணிக்கின்றனர். அக்கணக்குக்களைக் கொண்டு, மிக எளிதிலே, சூரியனது சூட்டினை அளந்தறியலாம். இம்முறையைச் சுருக்கமாகக் கூறுவோம்.

சூரிய ஒளி பரவுதல்:—சூரியனிலிருந்து வெளிவருகிற வெளிச்சம், ஒரு தீபத்திலிருந்து வருகின்ற வெளிச்சத்தைப் போலவே பரவுகின்றது. ஒரு சிறு குழந்தை வாயிலே வைத்து ஊதிப்பெருக்கும் வாயுக்கூண்டின் (Toy balloon) வெளிப்புறம், எவ்வாறு பெருகிக்கொண்டே வருகிறதோ, அவ்வாறே இவ்வெளிச்சமும் பரவிப்பெருகுகிறது. சூரியனிலிருந்து வெளிவந்து, இப்பாரின்மீது தாக்கும் உஷ்ணசக்தி, சூரியனிலிருக்கும் உஷ்ணத்திலே மிகமிகச்சிறிய பகுதியேயாகும். $\left[\frac{1}{120,000,000}\right.$ அதாவது$\left.\right]$ பன்னிரண்டு கோடியில் ஒன்று, என்று கணக்கெடுத்திருக்கின்றனர். அங்கிருந்து பூமியில்வந்து தோன்றும் வெளிச்சமோ, அங்கிருக்கும் வெளிச்சத்தில் இருநூறு கோடியிலே ஒரு பகுதியாகும். $\left[\frac{1}{20000,000,000}\right]$ இவ்வாறு சூரிய உஷ்ணத்திலே இம்மியளவினதாக இருக்கவும், இந்த இளஞ்சூட்டில் வேனிற்காலத்தே நாம் படும்பாட்டை என் என்பது! வேனில் வெயிலை இளஞ்சூடென்றால், சூரியனில் இருக்கும் மகாசக்தியாம் பெருஞ்சூட்டை என் என்பது!

ஆரறி வார், எங்கள் அண்ணல் பெருமையை?
யாரறி வார்இந்த அகலமும் நீளமும்?
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்பு கின்றேனே.

என்று திருமூலர் பாடியிருப்பது, இந்தமகாசக்திக்குமொக்கும்அன்றோ? எல்லையற்றஇந்தப்பெருஞ்சக்தி, இடைவிடாது ஒழுங்காகச்சூரியனிலிருந்தும் பரவி வருகிறது. அஃது எங்கே போகிறதோ, எவ்வாறாகிறதோ நாம் அறியோம் ஆயினும், நமது பூமியில் வரையறுத்ததோர் சிறியபாகத்தில் ஒரு விநாடி நேரத்திற்குள் வந்து தாக்குகிற சூரிய உஷ்ணத்தின் சக்தியை, இவ்வளவினது என்று அளந்தறிந்து, கணக்கெடுப்போமாயின், சூரியனிடத்திலிருந்து ஒருநிமிஷ காலத்திலே பாய்கின்ற சக்தியை, எளிதில் கணக்கிட்டறியலாம். இந்தக் கணக்குமுறையின்படி, சூரியனு

டைய சூட்டின் அளவையும் நாம் கண்டுபிடிக்கலாம். இவ்வாறு செய்ய உதவும் கருவியே, சூரிய உஷ்ணமானி. இந்தச் சூரியச் சூட்டளந்தானைக் கொண்டு சூரியனுடைய உஷ்ணம், 6000 சுழி (டிகிரி Degree) என்று விஞ்ஞான சாஸ்திரிகள் நிர்ணயித்துள்ளார்கள்.

கருவிகளும், சூரிய ஆராய்ச்சியும்:-இவ்வாறு சூரிய ஆராய்ச்சிக்குப் பயன்படும் கருவிகள், பலதிறமாகப் பல்கித் திகழ்கின்றன. ஊனக்கண்கொண்டு காணலாகாதனவற்றைத் தூரதிருஷ்டிக் கண்ணாடிகொண்டு காண்கின்றோம். தூரதிருஷ்டிக் கண்ணாடிகொண்டு அறியலாகாத பொருள்களின் இயல்புகளை ஒளியுடைப்பானால் ஆராய்ந்து அறிகின்றோம். ஒளியுடைப்பானால் தெளிவாக விளங்காத அலையளவுகளை, ஒளிபுரட்டி வழியே தெளிவாகக்கண்டு அளக்கின்றோம். இக்காட்சிகளை, நிலையாக, நிலைபெறுத்த வேண்டிப் புகைப்படம் பிடித்து வைக்கின்றோம். ஒளி உடைப்பானையும், புகைப்படம் பிடித்தானையும் ஒன்றாகச் சேர்த்து, ஒளிவரிசைப் படம் பிடிப்பானாக உபயோகிக்கின்றோம். இஃதன்றியும் நம் மெய்யைத் தாக்குகிற உஷ்ணகிரணங்களைக் கொண்டு, ஆதித்தனுடைய உக்கிரத்தையும் உஷ்ணத்தையும் சூரியச் சூடளந்தானால் அறிகின்றோம். இக்கருவிகளில் ஒன்றாலாகும் வேலை, மற்றொன்றால் நடக்கும் வேலைக்குத் துணையாகிவர, இவையனைத்தும் ஒருங்குசேர்ந்து ஒன்றாய்ச் சூரியனியல்பை ஆராய்ந்து வருகின்றன. இவ்வாராய்ச்சி, இவ்வாறு பன்முகமாகப் பரந்து, நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றதேயன்றி, ஒரு முகமாகச் சுருங்கி முடிந்தபாடில்லை. வழங்குஒளி யாயத்துள் (Spectrum) ஆகி நின்ற மாமணிச் சோதியை, உள்நின்ற சீவன் ஆராயும் முறை ஈதாகும்.

உளங்கொளி யாவதென் னுண்ணின்ற சீவன்
வளங்கொளி யாநின்ற மாமணிச் சோதி
விளங்கொளி யாய்மின்னி விண்ணி லொடுங்கி
வளங்கொளி யாயத்துள் ஆகிநின் றானே

—திருமந்திரம்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[191-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பத்து 5-ம் தசகம்

1-ம் பாசுரம்

கற்பா ரிராம பிரானையல் லான்மற்றும் கற்பரோ
புற்பா முதலாப் புல்லெறும் பாதியொன் றின்றியே
நற்பா லயோத்தியில் வாழும் சராசரம் முற்றவு
நற்பா லுக்குய்த்தன னான்முகனார்பெற்றநாட்டுள்ளே

உரை:—புற்பா - பா புல் என்று அந்வயம்—பா - பரவுகின்ற, புல் - அருகம்புல் முதலியவை. புல் - அசையாப் பொருளில் கடை, எறும்பு - ஊர்வனவற்றில்கடை: இவை மிக அல்பங்கள் ஆனாலுங்கூட இராமபிரான் அருளுக்கு விஷயமாயின, என்பதிப் பாசுரம். நான்முகனார் பெற்ற நாட்டுக்குள்ளே-பிரமாவினால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்துள்ளே, நற்பால் அயோத்தியில் - புண்ணிய பூமியாகிய அவ்வயோத்தியா நாட்டில் இராமபிரான் பதினாயிரம் வருடங்கள் ஆண்ட நிமித்தங்கொண்டு இதில் வஸித்துவரும் ஜனங்கள் ஒரு தீங்கும்இயற்றாமல் நற்குண நற்செய்கைகளிலேயே 'யதாராஜா ததா பிரஜா' என்ற நியாயத்தாலே படிந்து, ஒரு தவமுயற்சி மெய்வருத்தம் யாதொன்றுமில்லாமல் நற்பாலுக் குய்த்தனன்-மேன்மேல் சிறப்புவாய்ந்த குணங்களைக் கைப்பற்றி நற்கதியடைந்திட இராமபிரான் அருள்செய்தனன். ஸ்தாவரவஸ்துக்களும் அப்பிரானது திருஷ்டிகோசரத்தால் நற்கெதியே அடைந்தனவென்ற திருவுளத்தால் "சராசரம் முற்றும்" என்றார்.

குறிப்பு:—சுக்கிர நீதியில் "ராஜா காலஸ்ய காரணம்" என்று வற்புறுத்தப்பட்டிருக்கின்ற தறியவும். "அரசன் குணம்போல் அவன் குடிகளின் குணங்களுமாம்." இராமபிரானதுபிரியதர்சனத்தில் மானிடர் மனதில் தீயவை குடிகொள்ளுமோ? வேதாந்திகள் பூர்வவினைப் பயன்களுக்குக் காரணமான பாபங்களை மூன்று வகைகளாக வகுத்துக் கூறுவார்கள்:—

(1) பிராரப்தம்-அதாவது தத்காலம்தீயபயனையோ நற்பயனையோகொடுப்பது.பக்தியோகம் தொடங்கினவுடன் இது நீங்கும். எல்லாப் பக்தியோகத்துக்கும் ஸாதநமான பகவத்தர்சனம் இராமபிரான் காலத்தவர்களுக்கு வாளாகிடைக்கின்றதல்லவோ; ஆதலால் இவ்வகை அவர்களை நலிவுசெய்ய இடமில்லை.

(2) ஸஞ்சிதம்:—இராமபிரானது பிரிய தரிசனத்தால் அவன்மேல் நேசமும் ஆசையும் வளரும். பகவானிடத்தில் சிறிதேனும் உண்மையான பக்தியிருந்தால், ஸ்ரீ கிருஷ்ணபகவான் பணித்தபடி "க்ஷிப்பரமபவதி தர்மாத்மா" என்கின்ற நியாயத்தினால் பூர்வம் சேர்ந்து சுமையாகவும் குவியலாயும் கிடக்கும் 'ஸஞ்சிதம்' இவனை யணுகி நலிவு செய்யாது. 'சீக்கிரத்தில் தர்மாத்மாவாக ஆய்விடுவான்' என்றல்லவோ பகவானின் மேல்கண்ட திருவாக்கு.

(3) ஆகாமியம்—இனி இஜ்ஜன்மத்தில் செய்வினையால் 'வரப்போகிற' பாவம் இவனை நலிய இயலாது. இராமபிரான் பிரிய தர்சனத்தால் இவனுக்குப் பாப எண்ணமும்செயலுமில்லையென்றுமுன்சொன்னோம். இராமபிரான் பிரியதர்சனன் என்பது வால்மீகி இராமாயணம் பாலகாண்ட முதல் சர்க்கத்தில் "ஆரிய ஸர்வ ஸமஸ்சைவ ஸதைகப் பிரியதர்சன" என்று 15-வது சுலோகத்திலும், ஷை 17-வது சுலோகத்தில் 'ஸோமவத் (சந்திரனைப்போல) பிரிய தரிசன" னென்றும், ஷை முதல் சுலோகத்தில் எல்லா ஆரியர்களிடத்திலும் இராமன்ஸமமாய் எப்பொழுதும் ஹிதமாயும் பிரியமாயுமிருக்கின்றானென்று சொல்லி 2-வது சுலோகத்தில் ஆரியன் (குணசிரேஷ்டர்) மற்றவர்கள் எல்லாருக்கும்கூடச் சந்திரனைப்போல் மனத்துக்குச் சந்தோஷத்தை விளைக்கிறானென்றும்கூறப்பட்டிருப்பதை யறிக. கற்பார் ராமபிரானையல்லால் - இராமாயணத்தில் இராமபிரானுடைய திவ்விய சரித்திரத்தில் ஈடுபட்டு ரஸமனுபவித்தவர் வேறு எந்தச்சரித்திரத்திலும் இழிய மனம் செலுத்தார் என்ற அர்த்தத்தில் வந்திருக்கிறது.

விசேஷக் குறிப்பு—"நற்பாலுக்குய்த்தனன்" என்பதற்கு இராமன் மோக்ஷம் கொடுத்தருளினாரென்று

அர்த்தம் கூறுவது இயல்பு. ஆனல்இது ஆழ்வாரின் விசிஷ்டாத்வைத மதத்திற்கும் கொள்கைக்குமொவ் வாது. பக்தியோக்கவடுகளிலொன்றையோ, பிரபத்தி உபாயத்தையோ அவலம்பித்துக் கைப்பிடித்துஅனு ட்டானம் செய்தாலொழிய மோக்கமடைய வேறு மார்க்கமில்லையென்று 6-ம் திருவாய்மொழி 10-ம் தசகம்(நோலாதாற்றேன்)8-ம் பாசுரம் தொடங்கி 9 10, 11-களின்உரையில் பரக்கவிசாரித்துத் தத்துவங் களெழுதியிருக்கிறோம். இனி, இராமநாம ஸ்மரணம் பஜனை, அர்ச்சனை, தோத்திரம் இவைகளாகிய நல் வழிக்கு இராம்பிரான் உய்த்தாரென்று மேல்எழும் பார்வையில் ஒரு பொருள் கூறக்கூடும். இதுவும்ஒவ் வாது. இவையெல்லாம் தாழ்வான அவரதுபக்தியின் கவடுகள். இவைகளில்ஒன்று சித்திக்க இராமபிரான் காலத்தில் ஒருவரும் ஆசைப்படார். நேரிலே இராம பிரபு ஸேவை தரிசனம் கிடைக்கில் இதை யடையும் உபாயங்களில் யாரும் இழிவார்களென்று சொல்லு வது அசம்பாவிதம். இராமாயணத்தில் சிற்சிலரை இராமன் திருநாட்டுக்கு உய்த்துச்சென்றாரென்றவத ந்திக்கு நிமித்தம், சிற்சில ஸத்துக்களைப் பொறுக்கி எடுத்துக்கொண்ட வகையால் சொன்னபடி; இவர் கள்தான் யாரெனில் மஹாசமுத்திரத்தில் கலந்து ஒருநீராகப் பெருகிப் பெருமைபெறும் ஆற்று ஒழுக் குக்களையும் ஊற்று நீர்களையும்போல் இராமபிரானு டைய ஸேவை ஸம்பாஷணை மிவற்றிற் காசைப்பட்டு அப்பிரபுவின் அரண்மனைக்கு ஸதா ஸர்வ காலமும் சென்று அநுபவிக்கும் ரஸிகசிகாமணிகளான பிரிய தர்சனத்தி லீடுபடும் மானிடஸத்துக்கள். "ஸர்வதா அபிமுக ஸத்பி ஸமுத்திரைவ ஸிந்துபி:" என்ற ரா மாயண சுலோகம் அநுபவிக்க விடந்தரும்.

2-ம் பாசுரம்

நாட்டிற் பிறந்தவர் நாரணர்க் காளன்றி யாவரோ
நாட்டிற் பிறந்து படாதன பட்டு மனிசர்க்கா
நாட்டை நலியு மரக்கரை நாடித் தடிந்திட்டு
நாட்டையளித் துய்யச்செய்து நடந்தமை கேட்டுமே.

பதக் குறிப்புக்கள்:—நாராயணனுக்கு ஆளன்றி - நாராயணன் - நற்குணம் நிறைந்தவன், இங்கு வாத் ஸல்யம், ஸ்வாமித்துவம், ஆச்ரித ரக்ஷணத்துவம், சௌலப்யம்முதலியவை: மனுஷருடனேகலந்து அ வர்களுடைய நன்மையை நாடிச்செய்யும்குணங்கள். ஆள்அன்றி-இராமபிரான் தாஸராக அன்றி இருக்க மாட்டார்கள். நாட்டிற் பிறந்து - கேவலம் மனித வடிவில் ஜநித்து, படாதனபட்டு - ராஜ்ஜியாபிஷேகம் துடங்க நிச்சயித்தஸமயத்தில் காட்டுக்குப் பாதசாரி யாய் எல்லாம் துறந்து தன் பாரியையுடன் ஏகுதல் முதலிய செய்து, தேசதேசம் காடு நாடு எல்லாவிடத் திலும் விடாதுசென்று மனிதரை அல்லல்படுத்தும் அரக்கரைத் தேடி அழித்திடவேண்டுமென்றே பிதுர் வாக்கிய பரிபாலனம் என்ற வியாஜங்கொண்டான். தடிந்திட்டு - கொன்று, நடந்தமை கேட்டுமே - இரா மசரித்திரத்தை இராமாயணத்தில் கேட்டால் அவ னுக்கே ஆள் ஆவாரென்று சொல்லவேண்டுமோ ?

3-ம் பாசுரம்.

[கேட்பரோ
கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றுங்
கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுக ளேவையுஞ்
சேட்பார் பழமைப் பகைவன் சிசுபாலன் திருவடி
தாட்பா லடைந்த தன்மை யறிவாரை யறிந்துமே.

பதக்குறிப்புகள்:—கேட்பார்கள் - பகவானின் திவ் விய சரித்திரங்களைச் சொல்லவல்லவ ருண்டாயின்- அதாவது "தன்மை யறிவாரை, அறிந்துமே" என் றென்று "அறிந்ததுமே". பகவான், சிசுபாலன்செய்த தீமைகளையெல்லாம் மறந்துவிட்டு அவன் திட்டின இழிவான வசவுகளையும் க்ஷமைகொண்டு மூன்று ஜன்மங்களில் அவ்வசுரன் பகைவனாயிருந்தும் தம் திருவடியிலே"தாட்பாலடைவித்த" வாங்கியருளின இம் மஹா சரித்திரத்தை விஸ்மயத்தோடு கேட்பார் கள். முதல் ஜன்மத்தில் ஹிரண்யாக்ஷனாய், உலகத் தவர் ஹரிநாம ஹரிபஜனங்கள் செய்யக்கூடாதென் றும், தம் பரம பக்தனை பிரஹலாதனை நலிவு செய் தும், இரண்டாவதில் ராவணனாய் இராமபத்நி ஸீ தையை அபஹரித்துச்சிறையில்வைத்துப் பீடித்தும், மூன்றாவதில் சிசுபாலனாய் 100-பிழையைப் பகவா னுக்குத் தூர்த்தரையாகச் செய்தும் 101-வது பிழை நிஷ்காரணமாய் மனஸ்கரித்து இயற்றிய பின்னரே கொன்றபோதிலும் அவனுக்குத் தமது திருவடியில் கைங்கரியஞ் செய்யப் பகவான் அருள்செய்த காரு ணியத்தை ஆநந்தத்தோடும் விஸ்மயத்தோடும் கேட் பார்கள். சிசுபாலனை நூறுபிழைகளுக்கு க்ஷமை கொள்ளவேண்டுமென்று அவனது தாய் கிருஷ்ண பகவானைக் கெஞ்சி வரங்கேட்க அப்படியே ஆகட்டு மென்று வரமளித்திருந்ததன் நிமித்தம் அவனோடு சண்டை நேர்ந்து எதிர்ந்த போதிலும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவனை வதைக்கமாட்டாமையினால் முன் சிலதடவைகளில் ஓடியோ மறைந்தோ போகலானார். 101-வது தடவை யுதிஷ்டிரர் ராஜஸூயயாகம் நட த்தி முடித்த சமயம், இதில் யாருக்கு முதல் மரியா தையாகத் தாம்பூலம் கொடுப்பதென்று கேள்வி வர ஸஹாதேவன் தூண்டுதலால் பீஷ்மர் கிருஷ்ணபகவா னுக்கு அதை அளிக்கவே சிசுபாலன் ஸ்ரீ ருக்குமணி பிராட்டியின் பாதிவிருத்தியத்தை அஸப்பியமாயும் அஸங்கதமாயும் திட்டினான். தமக்கு நீட்டிய தாம்பூ லமடங்கிய தாம்பாளத்தைப் பகவான் அங்கீகரிக்கத் திருக் கையை நீட்டுங்கால் அதுவே ஜ்வாலைகொண்டு அவனின் சக்கராயுதமாய்ச்சுழன்று எல்லாச் சபைக் கூட்டமும் பார்த்துக்கொண்டிருக்கச் சிசுபாலன்தலை யைஅறுத்தது. அதற்குமூலம் பகவானுக்கு அந்தரங் கத்தொண்டு செய்யும் துவாரபாலகன் பக்தர்களிடத் தில்அபசாரப்பட, ஏழுஜன்மம் தவமியற்றிப்பிறகுவர வோ அல்லது மூன்றுஜன்மங்களில் பகைவனாய்நின்று அவனால்ஸம்ஹரிக்கப்படவோபகவான் இட்டகட்ட ளைப்படி ஏழு ஜன்மங்கள் விலகியிருப்பதைக்காட்டி லும் மூன்று ஜன்மத்திலேயே பாபவிமோசனத்தைத் துவாரபாலகர் வேண்டிமேலேகண்டபடி ஹிரண்யா க்ஷன், இராவணன், சிசுபாலன் ஆயினவர்களை வதைக் கப் பகவான் அவதரித்தார்.

4-ம்பாசுரம்

தன்மை யறிபவர் தாமவர்க் காளன்றி யாவரோ
பன்மைப்படர்பொருளாதுமில்பாழ்நெடுங்காலத்து
நன்மைப்புனற்பண்ணி நான்முகனைப் பண்ணித்தன்
[னுள்ளே
தொன்மை மயக்கிய தோற்றியசூழல்கள் சிந்தித்தே.

அவதாரிகை:—பகைவனுக்கு, மோக்ஷம் கொடுப்

பது அதிசயமோ? உலக சிரிஷ்டிகள் இதினும்அதிக வியப்புத் தருமன்ரோ?

குறிப்பு:—பன்மை - வெகு பிரகாரங்களாக-அதாவது,தேவமனுஷிய விலங்கு மரம்செடி முதலிய பல வகைகளாக, படர்-ஜகத்தில் அதாவது மூன்று லோகங்களிலிம் பரவியிருக்கிற, பொருள் யாதுமில்- இப்போழ்து காணப்படுகிற வஸ்துக்கள்யாதொன்றும் காணப்படாமல், பாழ் - மூன்று உலகங்கள்-பூலோகம் புவர்லோகம் ஸுவர்லோகம் இவைகளெல்லாம் பகவத் ஸங்கல்பத்தால் படைக்கப்படாம லிருக்கையில்-அதாவது ஓர்பிரம்மாவினுடைய தினம்முடிவில் ஏற்படும்பிரளயத்தின் முன்னர், தொன்மை-பழையதாய், அதாவது அதன் முன்னர் நடந்துபோன பிரம்மாவின் தினசிருஷ்டியிலிருந்த சேதநா சிருஷ்டிவிசேஷங்களை யாதொரு உருவமும் நாமமும் சேஷ்டிதங்களுமில்லாலல் மெழுக்கில் ஒற்றிக்கிடக்கும் பொன் போல், மயக்கிய-ஒருதனியாக நிற்கும் பரமபுருஷன் தன்னுளடக்கிய வுருக்கள், தோன்றிய- அந்தப் பரம புருஷன்ஆணையால் வெளிப்படையாகச்சிருஷ்டிக்கப் பட்டன. இப்படி மயங்கிக்கிடந்த கால அளவு பிரம்மாவின் ஒரு ராத்திரியின் அளவாகும்.அதாவது 17 லக்ஷத்து இருபத்து எட்டாயிரம் வருஷம் இரவும், 17064000 பிரம்மசிருஷ்டி பூர்த்தியாகக் கிருஷிகாலமும்ஆகையால்சிருஷ்டியாதி காலத்தைக் குறித்திருக்கிற இருடிகள் உலகங்கள்முழுவதும் நிகழும்மஹா கல்பம் தடங்கி 1955885036 வருஷங்களாயிற்று என்று கணக்குக்கூறியிருக்கிறார்கள்.ஓர் பிரம்மாவின் நூறுஆயுசு 311,040,000,000,000 வருஷங்களாகத் தீரும்;அதாவது ஒரு மஹாகல்பம் ஒரு மஹாயுகம் 43 லட்சத்தி இருபதினாயிரம் வருஷம்; நூறு மஹாயுகமாகிய ஒரு கல்பம் 432கோடி வருஷங்களாகும்.

உரை:—இவ்வண்ணம் தோன்றிய முன்னர் - நன்மை புனல் பண்ணி - ஆகாசம் வாயு அக்நி இவைகளெல்லாம் நீருடன் ஒன்றுகூடிக் கலந்து கிடந்த பிரளய வெள்ளத்தை வறட்டி, முதலில் பிருதிவியையும் பிறகு ஓஷதிகளையும், அன்னத்தையும், பருக நன்னீரைப் பண்ணி- முன்னிருந்த நீர் பருக உதவாத நீராகையால் திரும்பியும் பகவான் நன்னீர் படைக்க ஆவசியப்பட்டது. பிரமனைப் பண்ணி-சதுர்முகனை பிரம்மாவைஉலகங்களைப்படைக்க உண்டாக்கினான். சூழல்கள் சிந்தித்ததே-இவ்வளவோடுநின்றுலும்சிருஷ்டி பூரணமாகுமோ? போதா! பிரம்மன் வகுக்கும் பிருகிருதிகளின் அம்சங்களிலே சேதநங்கள் புகத் தானும்அவைகளின் ஒவ்வொன்றிலும்அந்தப் பிறவி விஷயமாய்க் கடவுளாக உள்புகுந்தான். இக்கிரியைகள் எல்லாம் ஒன்றுசேர வெகுசூழ்ச்சிகள்ஸங்கல்ப மாத்திரமாய் அவனுக்குப் பட்டதாயினும் அனேகமாகிய கிரியாகலாபங்கள்என்று கணிசித்துச் 'சூழல்கள்' என்று பன்மைப் பிரயோகம். இதெல்லாம் சிந்திக்கிறவர்கள் அதாவது வேதாந்த சாஸ்திரங்களாலறிந்து ஆராய்ச்சிசெய்பவர்இராமபிரானுக்கல்லால் மற்ற எத்தெய்வத்துக்கு ஆளாவார்கள்!

உருபு மயக்கம்

(சிறு கதை)

மாந்தாரதேயத்தரசன் மந்தரேசன்என்பான்சிலத்திற் சிறந்த மன்னவர்மரபின் முதல்வரிசையில் நிற்க வல்ல மேன்மையோன். அவன் காவலில் அடங்கிய ஜீவகோடிகள் அனைத்தும் கவலையின்றி வாழ்ந்தன. இவன் பத்தினி மங்களாங்கியும் மிகநல்லள்; இவர் புத்திரன் இந்திரேசன் திண்மையும்வீரமும் திரண்டு வந்ததோர் உருவம்போல்வான்.

படைவலி மிகவுடைய மத்திரதேசத்தரசன், மாந்தாரநாட்டின்மேல் போர்கொண்டெழுந்துவந்தான். மந்தரேசன் அவனை எதிர்ப்பதற்குரிய முயற்சிகளைச் செய்துவருங்கால் இடையே சிறிது தளர்ச்சியடைந்தானாகி, பகையரசன் தன்நகர் மதிலைச்சூழ்ந்து முற்றுகையிடும்வரையில் காலந் தாழ்ந்துவிட்டான். இதனால், அந்நகரமக்களுக்கும் போர்ச்சேவகர்களுக்கும் சிறிது கலக்கம் ஏற்பட்டது. பகைப்படை தம் நாட்டில் கால்வைப்பதற்கு முன்னரே அதனை எதிர்கொண்டு தகர்த்திருத்தலே தக்கதென்றும் அது செய்யாமல் இத்தூரம் விட்டதால் இம்மன்னவன் இழைத்தபிழை மிகப் பெரியதென்றும் எல்லோரும் நொந்தனர். இவ்வாறு நொந்தவர்களில் மன்னன் மைந்தன் இந்திரேசனும் ஒருவன். தந்தைக்கிவன் தன் மனத்தைத் தெரிவிக்கும் எண்ணமோடு அரண்மனையுள் தேடிவருங்கால், அரசன் அந்தப்புரத்தில் இருந்தானென்று ஏவலாளர் உரைத்தனர். "பகைஞர் புறஞ்சூழ்ந்து நிற்கும் இவ்வேளை, கொத்தளத்தின் உச்சியிலன்றி அந்தப்புரத்தினுள் வேந்தனுக்கு விளைந்த வேலை மிக அழகே" எனச் சிறிது கலக்கமுற நகைத்துத் தனதன்னை மங்களாங்கியின் மாளிகையின்கண் எய்தினன்.

அரசன் அங்குச் சிந்தனையில் ஆழ்ந்திருக்க, அவனருகு பரிவுதேங்கிய முகத்தினோடு தேவியும் நின்றிருந்தனள். இந்திரேசன் அவர்களை வணங்கி, "புரவல, இவ்வேளை நானுன்னை இவ்விடத்தே காணவோ எண்ணினேனல்லேன்......" என்னுமளவில்மன்னவனொருமுறைஅவன்முகத்தினை அரைக்கணம் நோக்கி மீண்டுந் தலைகவிழ்ந்தனன். "மன்னவா, நின் மகனை இரங்கிநோக்க நிற்குமொரு காலமன்று இது. பகைஞர் நம்மைப் பசித்துநோக்கும்வேளையே வந்துற்றது.மத்திரனுக்கு நம் அரசையும் குடிகளின் வாழ்வையும் மரபின் பெருமையையும் நீ காட்டிக்கொடுத்துவிட்டாய். இன்னு மிரண்டொரு நாட்களில் இம்மதிலை எறிந்து அவன் உள்ளேபுக, நம் மகவென வளர்ந்த இந்நகரத்துமக்களை அவன் வெஞ்சின வாள்களுக்கு இரையாக்கும் விழவினை என்னை யீன்ற இவ்வொரு அன்னையின் மாளிகைச் சாளரவழியே காணவேண்டுமென்பது நின் திருவுளக் கருத்தோ, அதனை இயம்பு

வாய்'' எனக் கழறுதலும், மங்களாங்கி மெல்லென மெல்லென அவன்பால் வந்து, "மைந்த, இடுக்கண் ஒன்று எய்தியதென்னின், இனி இன்சொல் வழங்குதற்கு இடமிலை என்று எண்ணற்கே இயன்றதோ நீ கற்றஅக்கல்வி! மன்னனென்றும் பாராய், அன்னையென்றும் பாராய், நயமிலாதன இவை நவிலலுற்ருய். உன்னையீன்ற அன்னையின் சாளரத்தின் வழியே அரசன் காணற் கமைந்தன, மைந்த, நீ பேசும் இவ்விழவின்றி, வேறு பல. மத்திரன் நம்மை நலியக்கருதி வந்தானேனும், அவனதனைச் செய்வது இயல்வதாவதன்முன் நீ நின் அரசதந்தையை மெலிவுசெய்ய வேண்டுமென்னும் விதியாண்டுளது!'' என்று கூறி ஏங்கலுற்ருள்.

இங்ஙனம்கூறிய அப்பெருந்தேவியை அரசன் தன் கண்களால் வாழ்த்துவான்போல் குழைந்துநோக்கி, தான் அமர்ந்திருந்த ஆதனத்தினின்றும் எழுந்திருந்து, "நங்காய், நின்னேடிருந்து நின்னெடு பழகி, நின்னலம் நினைத்து, தூய்மையன் ஆயின யான், நின் நற்பெருங்கோயிலின் சாளரத்தின் வழியே இவ்வாகாயப்பெருவெளியி லடங்கியபிரபஞ்சத்தின் பெருமையும் அருமையும் இனிதுகாணப்பெற்றேன் என்பதை எங்ஙனம் அறிவான் இவ்விளையோன்'' என இயம்பியவாங்கே ஓர் சாளரத் தருகுசென்று, மீண்டு மப்பிரபஞ்சத்தை நெடிது நோக்குவான்போல் நின்ருன். அப்பொழுது, பகைப்படைஞர் போர்முழக்கம் இவர் செவிகளை எட்டியது.

அது கேட்ட இந்திரேசன் அரையிற் கட்டிய வாளினை அவிழ்த்தெறிந்து அவ்வறையினின்று அகலுந் தறுவாயில், மங்களாங்கி அவனைவழிமறித்து, "மைந்த, நீ எவ்வயின் யாதுசெய்ய ஏகுகின்ருயென்பது அறிகிலேன்; ஆயினும், நின்கருத்து யாவதாயினும், அதனை முடித்திடுதன்முன், உன் அருமைத் தந்தையின் சிந்தனையைத் தெரிந்துகொள்ள நீ விழைவாயாயின் விளம்புகின்றேன்'' என்றனள். "நானும் சிறிதறிவேன்'' என்ருன் மைந்தன். "அறிவாயாயின் இயம்புதி'' என அவன் அன்னையும் வினவினுள். "இவ்வரசினை நான் எய்தாமல் இழப்பிக்க வேண்டுமென்பதன்றி, வேறென்று மில்லை'' என்ன இவன் சினமுடன் சில மொழிகள் இயம்புமளவில் மங்களாங்கியின் மழைக்கண்களினின்று தாளங்கள் உருளலாயின. இவன் இயம்பிய இம்மொழிகள் மன்னவன் செவிகளைச் சேர்ந்தன; திரும்பி நோக்கினுன். "இந்திரேச, நீயோ இது இயம்புகின்ருய். வாயின் வந்தன வழங்குகின்ருயல்லால் நின் மதியின்திறத்திற் கிது அழகன்று. உன்னை அரசு இழப்பிக்க வேண்டுமென்னவேயான் கொள்ளவல்ல ஊக்கத்திற்குக் காரணம் யாவதாயிருத்தல் கூடுமென்று நினைக்கின்ருய். அதனையும் வகுத்துரைக்க வல்லையோ?'' என்று வினவினுன்.

"வல்லேனுயினும் அதனை விளம்பியாது பயன்: நிகழுநிற்பதை இவ்வகை உரையாடல் மாற்றுந் தரத்ததன்று. மன்னவன் சிந்தனைக்கு அங்கு மதிற்புறத்தில் மத்திரன் முரசங்கள் மறுமொழி கூறுகின்றன. நிகழ்வனவெல்லாம் நிகழ்க, அனைத்தையும் காணப் பிறந்தேனும் இருக்கின்றேன்'' என்று இந்திரேசன் பகர்ந்தனன்.

(தொடரும்)

கலாநிலயம்

முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன, உடனே பெற்றுக்கொள்வது நலம்.

1928, 1930, 1931, 1932, 1933, 1934 வருடத்தியவை கிடைக்கும்.

பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ.	7	8	0
ஆப்லெதர் கில்ட் பைண்ட் ,,	9	0	0
ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது	10	0	0

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னுப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினுல், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளிநாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.

பல போலிகள் இருப்பதால் நம் பிக்கையடைய நேரில் எழுதுக.

ஜீர்ச்ப்
அஜீர்ண பித்த சமனம்

ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்கள் நஞ்சன்கூடு பல் பொடி வீட்டில் பெறுக.

நஞ்சன்கூடு பல்பொடி
சோல் ஏஜன்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

வர்த்தமானம்

நாயின் நன்றி:—குவெட்டா பூகம்பத்திலிருந்து தப்பி வந்த சுமார் 100 பேர் வரையிற் கராய்ச்சியில் இருக்கின்றனர். அவர்களில் குமஸ்தா வேலை செய்த ஒருவர் தமது நாயினால் தாம் காப்பாற்றப்பட்ட விந்தையைக் கூறுகிறார். நாயின் நன்றி சிலாகிக்கத் தக்கதே. வீடுகள் இடிந்து அவரைச் சுற்றிலும் விழுந்து அவர் அகப்பட்டுக்கொண்டுவிட்டாராம். அதையறிந்த நாய் அருகிலிருந்த சுவரை பிறாண்டிக்கொண்டேயிருந்ததால், உள்ளே சுவாசிக்கக் காற்று புகுவதற்கு சவுகரியமாயிருந்ததாம். பிறகு அங்கு வந்த கோஷ்டியார், நாய் இருப்பது கண்டு உள்ளே ஆள் இருக்கவேண்டுமென்று நினைத்துப் பிறகு அக் குமஸ்தாவை வெளியே கொணர்ந்தார்களாம்.

* * *

நாயின் நல்லறிவு:—ஆஸ்திரேலியா தேசத்திலுள்ள விக்டோரியா என்னும் இடத்திலிருந்து சொற்ப தூரத்திலுள்ள சில்மோர் நகரில் பரடி என்னும் பெயரிய வளர்ப்பு நாயொன்று கடந்த 30 வருஷங்களாகத் தன் எஜமானனுக்குச் செய்துவரும் பேரூழியம் போற்றத்தக்கது. அது சிறிதுந் தவறாமல் பத்திரிகைகள் விற்கப்படும் ஒரு மோட்டார்க்காரிலிருந்து தினசரிப் பத்திரிகைகளை வாங்கிக் கால்மைல் தூரத்திற் கப்பாலுள்ள அதன் எஜமானரிடம் கொடுத்துவருகிறதாம். தினசரி காலை 7-மணிக்கு அது குன்றின் மேல் உட்கார்ந்துகொண்டு ரோட்டில் செல்லும் மற்றக் கார்களை ஏறெடுத்துப் பாராதாம். ஆனால் சுமார் 300 கஜதூரத்திற்கப்பால் வரும்போதே தபால் காரைப் பார்த்து அதைச் சந்திக்கப்போகும், என்று 'ஆஸ்ட்ரல் நியூஸ் பத்திரிகை சொல்லுகிறது- ஞாயிற்றுக்கிழமைகளில் மற்ற வேலைகளைக் கவனிக்கச் சென்றுவிடுமாம். ஏனெனில் அன்று பத்திரிகை இராதென்பது அதற்குத் தெரியுமாம்.

உலகத்துப் பெரிய அரண்மனை:—ஐரோப்பாவிலே மிகப் பெரிய அரண்மனை ஸ்பெயின் தேச மன்னருக்கே உரியது. அதனுள் இருக்கும் சகல அறைகளையும் கட்டிடங்களையும் சுற்றிப்பார்க்க நாலுநாள் பிடிக்குமாம்; அது சுமார் 120 மைல் பிரயாணஞ் செய்வதற்குச் சமமாகும்.

* * *

அற்புத ஆடை:—ஐரோப்பாவில் ரிவைரா வென்னும்இடத்தில் பல இளம் பெண்களும் ஆண்களும் நிர்வாணமாகச் சூரியஸ்நானம் சமுத்திர ஸ்நானம் போன்றவைகள்செய்யப் பிரியப்பட்டாலும் சட்டம் அதற்கு இடங் கொடாமையால் அவர்கள் தண்ணீரில் கரைந்து போகக்கூடிய ஒருவிதமான வஸ்துவைக் கொண்டு ஸ்நான ஆடைகள் தயார் செய்து வைத்திருக்கின்றனராம். இந்த ஆடைகள் இதர சாதாரண ஸ்நான ஆடைகளைப் போன்றே இருக்கின்றனவாம். ஆனால் இந்த ஆடைகளுடன் தண்ணீரில் குதித்துவிட்டதும் இந்த ஆடைகளெல்லாம் தண்ணீரில் உடனேகரைந்து தண்ணீரோடு தண்ணீராக ஓடிவிடுகின்றனவாம்.

உடம்பை மூடுவது எதுவானாலும் அதுவே உடை என்று அனேகர் எண்ணிவிடுவது போல, மனிதர் கண்களுக்குப் பொதுவாக எல்லா இன்ஷூயரன்ஸ் பாலிஸிகளும் ஒரே மாதிரியாகத் தோன்றலாம். ஆனால், பகுத்தறிவும் அழகின் தரமும் தெரிந்தவர், உடை யெவ்வாறு தைக்கப்பட்டிருக்கின்றதென்பதையும், அது நெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தையற்காரர் இடத்திலிருந்து வருகிறதா வென்பதையுங் கவனிப்பார்கள். 'நாஷனல்' பாலிஸிக்கு இந்தச் சிறப்பு முத்திரை யிருக்கிறது. கல்கத்தாவில் ஹெட் ஆபீஸ் உடைய

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பெனி லிமிடட்

கொடுக்கின்ற ஒவ்வொரு பாலிஸிக்கும் முப்பது வருடத்திய திறமை வாய்ந்த இன்ஷூயரன்ஸ் காரியானுபவம் ஆதாரமா யிருக்கிறது.

அஸ்ஸெட்ஸ்	2½ கோடிக்கு மேல்
நடைமுதல் பிஸினஸ்	10 கோடிக்கு மேல்

ஏஜென்ஸி எடுத்துக்கொள்ள விரும்புகின்றவர் கீழ்க்காணும் விலாஸங்களுக்கு எழுதவும்.

ப்ரான்ச் ஸெக்ரடரி, நாஷனல் இன்ஷூயரன்ஸ் பில்டிங், 362. சைனபஜார் தெரு, சென்னை.

ஆர்கனைஸிங் ஸெக்ரடரி, ஸப் ஆபீஸ், 171. ந்யூ ஸ்ட்ரீட், மதுரை.

சீப் ஏஜன்ஸி, ஆர்காட் ஸ்ரீனிவாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

நெருப்பு மோட்டார் விபத்துக்கள்,

அஸ்ஸோஸ்ஸியேடெட் நாஷனல் பையர் அண்ட் ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பனியால் (லிமிடெட்) இன்ஷ்யூர் செய்யப்படும்.

இண்டோ-கம்மர்ஷியல்

பாங்க், லிமிடெட்.

மாயவரம்

சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு;
பஜார் பிராஞ்சு, 260. சைனபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதருஸ்.

சிறந்த பலவிருத்தி ஔஷதம்

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1

இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)